உ
சிவமயம்

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

## சில அனுபவங்கள்



திருமதி மீனாக்ஷி அம்மா சேதுமாதவ ஐயர்

நினைவு வெளியீடு

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

## சில அநுபவங்கள்

2 8 NOV 2008
மாநகரசபை யாழ்ப்பாணம்

சே. சிவசண்முகராஜா

அமரர் திருமதி சேதுமாதவ ஐயர்

மீனாக்ஷி அம்மா

அவர்களின்

**நினைவு வெளியீடு**

உ

சிவமயம்



மண்ணுலகில்
மலர்வு
02.09.1934

இறைவன் திருவடியில்
இணைவு
08.11.2008

# அமரர் திருமதி சேதுமாதவ ஐயர் மீனாக்ஷி அம்மா

## அவர்கள்

### திதி வெண்பா

ஆண்டு சர்வ தாரிவளரும் ஐப்பசி ஏகாதசியில்
ஈண்டுதமைப் பீரிந்த தெய்வமாம் - வேண்டுகுண
மீனாட்சி யம்மா விரும்பியே தெய்வபதம்
தானடைந்தார் இவ்வுலகை வீட்டு

# வெளியீட்டுரை

தென்னிந்தியாவில் நாம் சில ஆண்டுகள் தங்கியிருந்த போது எமது தாயார் திருமதி மீனாக்ஷி அம்மா அவர்களும் எம்முடன் தங்கியிருந்து அங்குள்ள திருத்தலங்கள் பலவற்றையும் தரிசித்து மகிழ்ச்சியும் மனநிறைவும் பெற்றார்.

தான்பெற்ற அனுபவங்களை உறவினர்களுக்கும் உற்றாருக்கும் கூறி மகிழ்வது அவரின் வழக்கம்.

அவருடன் சேர்ந்து அனுபவித்த அந்த இனிய அனுபவங்களிற் சிலவற்றை மீட்டு, அவரின் நினைவாக இச்சிறுநூல் வெளியிடப்படுகிறது.

**- பிள்ளைகள்**

# அணிந்துரை

**டாக்டர் மா. வேதநாதன்,**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
இணைப்பாளர், சைவசித்தாந்தம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

*"தென்னிந்தியத் திருத்தல யாத்திரை - சில அனுபவங்கள்" என்ற பொருண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையின் முதுநிலை விரிவுரையாளர், தரம் I, வைத்திய கலாநிதி சே. சிவசண்முகராஜா அவர்கள், அமரத்துவ மடைந்த தனது அம்மாவின் நினைவாக 'ஓர் ஆன்மீக அனுபவ நூலை' அரிதின் முயன்று வெளியிட்டிருப்பது பாராட்டற்பாலது.*

*தென்னிந்தியத் திருத்தலங்கள் ஆன்மீக வழிபாட்டிடங்களாக மட்டுமன்றி வாழ்க்கையை வளம்படுத்தும் சமுதாய நிறுவனங்களாகவும் விளங்கி வருகின்றன. இத்திருத்தலங்களைத் தனது தாயாருடன் சென்று வழிபட்ட தவப்பயனுடையவராக நூலாசிரியர் விளங்குவது போற்றுதலுக்குரியது.*

*சிவாலயஓட்டம், நவராத்திரி, நவதிருப்பதி, திருப்பதி தரிசனம், கடலுக்குள் ஒரு நவக்கிரகக்கோயில், தஞ்சைப் பெருங்கோயில், நவக்கிரக ஸ்தலங்கள், திருக்கடவூர் அபிராமி*

அம்மன் ஆலயம், மதுரை மீனாட்சியம்மன் கோயில், கேரளத் திருத்தலங்கள், பத்மநாபசுவாமி கோயில், ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோயில் என்ற பல தலைப்புகளில் நூலாசிரியர் அரிதின் முயன்று சேகரித்து வைத்திருந்த, நாம் அறியாத பல தகவல்களை இந்நூலில் குறிப்பிடுவது மனநிறைவைத் தருகின்றது. பாராட்டுதலுக்குரியது.


யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுக் கோலங்களுடன் தமிழகம் மற்றும் கேரளம் ஆகியவற்றின் பண்பாட்டுக் கூறுகளை ஒப்பிட்டு அறிந்து மகிழ்வதற்கு இந்நூல் பெரிதும் உதவுகின்றது.

இந்நூலைப் படிக்கும்போது தென்னாட்டில் திருத்தல யாத்திரை செய்வது போன்ற ஓர் உணர்வு ஏற்படுவதுடன் இதுவரை தென்னாட்டிற்குப் போகாதவர்கள் கட்டாயம் தாங்களும் ஒரு தடவை தென்நாட்டிற்குத் திருத்தல யாத்திரை செய்ய வேண்டும் என்ற விருப்பம் ஏற்படும் எனக் கூறமுடிகின்றது.

'அன்னை ஓர் ஆலயம்' என்ற உளப்பாங்குடன் தமது வாழ்நாளில் அன்னையைக் கோயிலாக மதித்து வாழ்ந்த இந்நூலாசிரியர் இதுவரை அரிய ஆய்வுநூல்கள் பலவற்றை எழுதிய அனுபவம் மிக்கவர்.

இந்நூலாசிரியர் வாழ்வும் வளமும் உயர்வும் பெற்றுச் சிறப்புற நயினை ஸ்ரீ நாகபூசணித் தாயின் பொன்னார் திருவடிகளை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

*15.11.2008* **மா. வேதநாதன்**



அன்னையும் பிதாவும்
இளமைத் தோற்றம்

# தென்னிந்திய திருத்தல யாத்திரை

## 1. அறிமுகம்

தென்னிந்திய சைவத்திருக்கோயில்களைக் காணக் கண் கோடிவேண்டும்!

அக்கோவில்களின் பெருமையைக் கூற ஆயிரம் நாவுடைய ஆதிசேடனால்தான் முடியும் என்று நான் கூறினால் அது மிகைப்படுத்திக் கூறுவதாகவே உங்களுக்குத் தோன்றும். ஆனாலும் நான் கூறுவதில் எவ்விதத் தவறும் இல்லை என்பதை தென்னிந்தியாவிற்கு யாத்திரை சென்றவர்களைக் கேட்டால் அவர்கள் வழிமொழிந்து ஆமோதிப்பார்கள்.

ஒவ்வொருகோவிலையும் பார்க்கும்போதும் இந்தப் பிரமாண்டமான கோவிலை எப்படிக் கட்டினார்கள் என்று மலைத்து நிற்கத்தான் முடிகிறது. இந்த உலகம் உள்ள வரையிலும் சைவசமயத்தையும், தமிழர் கலை, கலாசாரத்தையும் பிரதிபலிக்கும் வரலாற்றுச் சின்னமாக இக்கோவில்கள் நிலைத்து நிற்கும். உலக அதிசயம் ஏழு என்று கூறுவர். ஆனால், தமிழ்நாட்டுக் கோவில்கள் ஒவ்வொன்றுமே அதிசயமானவையாகவே காட்சி அளிக்கின்றன. இன்றைக்கு மக்களாகிய நம்மில் பலரும் நாம் வசிப்பதற்காக பங்களாக்களையும், மாடமாளிகைகளையும் கட்டிக்கொள்வதில் ஆர்வமுடையவர்களாக - ஆசை உடையவர்களாக இருக்கிறோம். (இது அந்நியர் ஆட்சியின்

பின்னர் ஏற்பட்ட விளைவாக இருக்கலாம்.) ஆனால், பண்டைய மக்களும், மன்னர்களும் கடவுளுக்கு பிரமாண்டமான கோவில் கள் கட்டுவதிலேயே பேரார்வம் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால்தான் இவ்வளவு கோவில்கள் உருவாகியிருக்கின்றன. அதுமட்டுமன்றி பண்டைய அரசர்களினதோ அல்லது மக்களி னதோ அரண்மனைகளோ, மாளிகைகளோ இன்று இல்லை. (சமீபகால மன்னர்கள் தவிர) ஆனால், அவர்கள் கட்டிய ஆல யங்கள் இன்றும் அன்று உருவாக்கியது போலவே காணப்படு கின்றன.

தமிழ்நாட்டு வரலாற்றில் உள்நாட்டு, வெளிநாட்டுப் படை யெடுப்புக்கள் பல நடைபெற்றிருக்கின்றன. அதிலும் வேற்று மதத்தவர்களினது படையெடுப்புக்கள் பல நடைபெற்றிருக்கின் றன. அவற்றையெல்லாம் எதிர்கொண்டு இன்றும் அழியாமல் வானளாவி நிற்கும் பல கோவில்களைக் காணும்போது இந்து சமயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பெருமிதம் கொள்ள வேண்டும்.

* * * *

இந்தியாவிற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் எனக்கு 1997ஆம் ஆண்டுவரை சிறிதளவில்கூட இருந்ததில்லை என்றே கூறலாம். ஆயினும், நான் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்த கைதடி சித்த போதனா வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி திருமதி இந்திரா சத்தியநாதன் அவர்கள் அடிக்கடி என்னை எனது பட்டமேற்படிப்பிற்காகத் தமிழ்நாடு பாளையங்கோட்டை சித்தவைத்தியக் கல்லூரிக்குச் செல்ல முயற்சி எடுக்கும்படி வற்புறுத்துவது வழக்கம். ஆனால், அக் காலத்தில் இந்தியாவில் சித்த மருத்துவ பட்டமேற்படிப்பிற்கு அனுமதி பெறுவது சுலபமான ஒரு விடயமாக இருக்கவில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை விரிவுரை யாளர்களால் கூட அங்கு பட்டமேற்படிப்புக்கு அனுமதிபெற

முடியாதிருந்தது. எனவே, நான் டாக்டர் இந்திரா சத்தியநாதன் கூறுவதை ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டுவிடுவேன். (இந்தியாவிலிருந்து திரும்பிய பிறகே நான் யாழ் - பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளனாக இணைந்து கொண்டேன்.)

1997ஆம் ஆண்டு மே மாதம் எனது மனைவியின் E.B. பரீட்சை சம்பந்தமாக கொழும்புக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. அங்கு எனது சகோதரன் வீட்டில் தங்கியிருந்தபோது எனது சித்தியின் சிநேகிதியான பாப்பாஅம்மா என்பவர் வந்திருந்தார். அவர் தனது நோய்பற்றி என்னிடம் ஆலோசனை கேட்டு பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு இந்தியாவில் உறவினர்கள், நண் பர்கள் இருப்பது எனக்கு நினைவுக்கு வந்தது. எனவே அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, பாளையங்கோட்டையில் சித்த மருத் துவப் பட்டமேற்படிப்பைப் படிப்பதற்கு எனக்கும், எனது மனை விக்கும் இரண்டு Application form தேவைப்படுகிறது என்று கூறினேன். அதற்கு அவர், விலாசத்தைக் கொடுங்கள் விண்ணப் பப்படிவம் எடுத்துத் தருவது எனது பொறுப்பு என்று கூறினார். நான் முகவரியை எழுதிக் கொடுத்துவிட்டு, யாழ். திரும்பி விட்டேன். பாப்பா அம்மா தான் சொன்னசொல்லை நிறைவேற்றி விட்டார். எனக்கும் எனது மனைவிக்கும் உரிய காலத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுத் தந்துவிட்டார். அதன் பிறகு தான் உண்மையாகவே எனக்கு இந்தியாவுக்குப் போகவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. கடவுளை நம்பி விண்ணப்பத்தை நிரப்பி அனுப்பி வைத்தோம். எங்களுக்கு அனுமதி கிடைத்து. பட்ட மேற்படிப்பிற்காக 1997 September இந்தியாவிற்குப் புறப் பட்டோம். 1997 September மாதம் முதல் 2000 ஆம் ஆண்டு October மாதம் வரை மூன்று வருடங்கள் அங்கு நாம் கல்வி கற்றோம். அதன் பிறகும் 2002, 2003 இலும் ஒவ்வொரு மாதம் இந்தியா சென்று வந்தேன். அப்போதெல்லாம் அம்மாவும் எம்முடன் கூட வந்தார்.

தமிழ்நாட்டில் என்னைப் பல விடயங்கள் வர்ந்தன. அங்குள்ள மக்களின் அன்பான வரவேற்பும் பழக்கமும் எனது

இதயத்தில் இன்றும் இனிமையாகப் பதிந்துள்ளது. வேற்றுமை யிலும் ஒற்றுமை காணும் அவர்களின் பண்பை கார்கில் யுத்தத் தின்போது நேரில் கண்டு பரவசப்பட்டேன். அங்கிருந்த மூன்று வருடங்களும் நானும் ஒரு தமிழனாக - இந்தியனாக அவர்களில் ஒருவனாக வாழ்ந்தேன் என்று கூறலாம். நான் இந்தியாவில் பிறக்காவிட்டாலும் எனது குழந்தை திருநெல்வேலி மண்ணில் - தமிழ்நாட்டில் பிறந்ததை நாம் ஒரு பெருமையாகவே கருது கிறோம். விட்ட குறை, தொட்டகுறைதான்.

தென்னிந்தியாவில் நான் அனுபவித்த இனிய அனுப வங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆசையால் நான் பல தகவல்களைச் சேகரித்தும் குறிப்புகளை எழுதியும் வைத்திருந்தேன். ஆயினும், இங்கு எனது வேலைப் பழு, மற்றும் சில பிரச்சினைகள் காரணமாக அவற்றைச் சேர்த்து, கோவைப்படுத்தி எழுதுவதற்கு இவ்வளவு காலம் பிடித்துவிட்டது. **அதுவும் என்னுடன் இந்தியாவில் எனக்கு உறுதுணையாகத் தங்கியிருந்து புண்ணிய திருத்தலங்கள் பலவற்றைத் தரிசித்து மகிழ்ந்த எனது தாயாரின் நினைவாக இதை வெளியிடுவது தெய்வ சங்கல்பம் போலும்.**

இது ஒரு பயணக்கட்டுரையல்ல என்பதைத் தெளிவு படுத்திக்கூற விரும்புகிறேன். தென்னிந்தியாவைப் பற்றி - அங்கு வாழ்பவர்களைப் பற்றி அவர்களின் பழக்க வழக்கங்கள் பற்றி பல துறைகளில் பல தலைப்புக்களில் எழுதலாம். இங்கு நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போவது நான் தரிசித்த சில தென்னிந்திய ஆலயங்கள் பற்றி மட்டுமே.

ஏன்?

இந்தியா ஒரு ஆன்மீக பூமி. இன்றைக்கு வெளித்தோற் றத்தில் சிலருக்கு அபிப்பிராயபேதம் இருந்தாலும், இன் றைக்கும் அங்கு ஆன்மீகம் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டுதான் இருக்கிறது! கண்ணால் காண முடியாவிட்டாலும் ஆன்மீகக் காற்று வீசிக்கொண்டுதான் இருக்கிறது! அந்தக்

காற்றைக் கொஞ்சம் சுவாசித்த அனுபவம்தான் எனது பேனா வழியாக உங்களுடன் பேசுகிறது. இதைப் படிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது அன்னையின் இனிய நினைவுகளும் எம் சிந்தையில் தோன்றி மகிழ்விக்கும்.

தமிழ்நாட்டில் கோவில் பூசைவழிபாட்டுக்காக திறக்கப் படுவதை நடைதிறத்தல் என்பர். பெரும்பாலான கோவில்கள் அதிகாலை 4-5 மணிக்கு நடைதிறப்பு நடக்கும். கோவில் பூட்டப்படுவதை நடைசாத்துதல் என்பர். பெரும்பாலும் காலை வேளைகளில் பகல் பன்னிரண்டு மணிக்கு நடைசாத்தப்படும். பின்னர் மாலை 4-5 மணிக்கு நடைதிறந்து இரவு 9 மணிக்கு நடைசாத்தப்படும். நடைதிறப்பு, நடை சாத்தல் பற்றி கோவில் விளம்பரப்பலகையில் எழுதப்பட்டிருக்கும். எனவே தரிசனம் செய்யச் செல்வோர் (கோவிலுக்குக் கும்பிடச் செல்வதையே தரிசனம் செய்தல் (சேவித்தல் என்பர்) இந்நேரங்களை அறிந்து வைத்திருப்பது அவசியம்.

யாழ்ப்பாணத்தில் சில பெரிய கோவில்கள் தவிர ஏனையவை பூஜைநேரத்தில் மட்டும் திறந்து மூடப்படுவதைக் காண்கிறோம். காலை, மாலை வேளைகளில் குறிப்பிட்ட நேரம் வரை தினமும் கோவில்களைத் திறந்து வைப்பது வழிபடு வோருக்கு வசதியாக இருக்குமல்லவா!

கோவில் பூசகர்களை இங்கு நாம் ஐயர், குருக்கள் என்று அழைப்பது போல அங்கே பட்டர் என்று அழைப்பர்.

கோவிலில் வழங்கப்படும் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம், பூ, துளசி முதலியவற்றைப் பிரசாதம் என்பர்.

சர்க்கரைப் பொங்கல், புளிச்சாதம் (புளியோதரை) தயிர்ச் சாதம், முறுக்கு, வடை முதலியவற்றையும் பிரசாதம் என்பர். பெரும்பாலான பெரிய கோவில்களில் ஓரிடத்தில் பிரசாத விற்பனை நிலையங்களிருக்கும். அங்கும் பணம் கொடுத்து பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கர்ப்பக் கிருகத்துக்கு முன்னுள்ள மண்டபம்வரை (அர்த்த மண்டபம்) யாரும் சென்று வழிபடலாம். அதாவது மூலவரை மிக நெருக்கமாகச் சென்று வழிபடமுடியும். (இலங்கைக் கோவில் களில் மகா மண்டபத்துக்கு உள்ளே பக்தர்கள் அனுமதிக்கப் படுவதில்லை)

பெரியகோவில்களில் மூலவரைச் சென்று வழிபட தர்ம வழி (பொதுவழி), சிறப்புவழி என்று இரண்டு வழிகள் உள. பொது வழியால் செல்பவர்கள் எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. ஆனால், சிறப்பு வழியால் சென்று தரிசனம் செய்வதற்குக் குறிப்பிட்ட கட்டணம் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டியிருக்கும். கூட்டம் அதிகமுள்ள நாட்களில் விரைவில் தரிசனம் செய்துவருவதற்கு கணிசமானோர் சிறப்புவழியை நாடுவர்.

விஷ்ணுவாலயங்களில் பிரசாதம் கொடுத்த பின்னர் ஒவ்வொருவர் சிரசிலும் பட்டர் சடாரி வைக்கும் வழக்கம் காணப்படுகிறது.

முக்கியஸ்தர்களுக்கு பகவானுக்குச் சாத்திய பட்டுத் துணியைத் தலையில் பரிவட்டம் கட்டும் வழக்கம் விஷ்ணு வாலயங்களில் காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் சைவம், வைஷ்ணவம் என்ற போட்டி தற்போது இல்லாவிட்டாலும், இரண்டு மதங்களையும் தனித் தனியே பின்பற்றுபவர்களும் இருக்கிறார்கள். எமது நாட்டைப் பொறுத்தவரையில் அத்தகைய பேதம் சிறிதும் இல்லை என்பது குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும்.

தமிழ்நாட்டுக் கோவில் ஒன்றினுள் பிரவேசிக்கும்போது, அக்கோவிலில் இறைவன் நடத்திய திருவிளையாடல்கள், திருத்தொண்டர்கள் நிகழ்த்திய அற்புதங்கள், மன்னர்களும் வள்ளல்களும் செய்த திருப்பணிச் சேவைகள் என்பன எம்மை மெய்சிலிர்க்க வைத்தன.

## 2. சிவாலய ஓட்டம்

1999ஆம் ஆண்டு மாசிமாதம் சிவராத்திரிக்கு முதல் நாள்! நான் பயின்று கொண்டிருந்த குழந்தை மருத்துவப் பிரிவும் எனது மனைவி பயின்று கொண்டிருந்த சிறப்பு மருத்துவப் பிரிவும் கேரளா திருவனந்தபுரத்தில் உள்ள அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் (இங்குதான் முன்னாள் பிரதமர் அமரர் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா ஆயுள்வேத சிகிச்சை பெறச் செல்வது வழக்கம்) பஞ்சகர்ம சிகிச்சைமுறை பற்றி அறிந்து கொள்வதற்காக மேற்கொண்டிருந்த சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பாளையங்கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தோம். (திருவனந்தபுரம் கேரளாவைச் சேர்ந்தது. அதன் எல்லையில் அமைந்துள்ளது தமிழ்நாடு குமரி மாவட்டம் / கன்னியாகுமரி மாவட்டம்,) நாங்கள் மார்த்தாண்டம் என்ற இடத்தில் வந்து கொண்டிருந்தபோது சில ஆண்கள் மேல் சட்டையின்றி, வேட்டியுடன், கையில் விசிறியுடனும் "கோபாலா' கோவிந்தா!" என்று கோஷமிட்டுக்கொண்டு ஓடிக்கொண்டிருந்ததைக் கண்டோம். எனக்கு அருகிலிருந்த நண்பர் D. K. சௌந்தரராஜனிடம் (அவர் பரமக்குடியைச் சேர்ந்த ஐயங்கார்) இது என்ன? ஏன் இவர்கள் ஓடுகிறார்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர் இதுதான் "சிவாலய ஓட்டம்" என்றார். "அப்படியென்றால்....?" என்று நான் கேட்டதற்கு எமக்குப் பின்னால் இருந்த மார்த்தாண்டத்தைச் சேர்ந்த டாக்டர் ராஜசேகர் விளக்கம் கூற முன் வந்தார். அவர்கள் கூறியவற்றையும், நான் சேகரித்த தகவல்களையும் இங்கே தொகுத்துத் தருகிறேன்.

"அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவர் வாயில் மண்ணு" என்பது பழமொழி. இப்பழமொழியை மெய்ப்பிப்பதற்காக வாயில் மண்ணுள்ள சிலர் அன்றும் இருந்திருக்கிறார்கள், இன்றும் இருக் கிறார்கள். அண்மையில் எமது பிரதேசத்தில் ஆஞ்சநேயர் கோவில் கட்டப்பட்டபோது எழுந்த வாதப்பிரதிவாதங்களும் இதை நிரூபிக் கின்றன. அரியும் அரனும் எங்களுக்குள் பேதமில்லை, பெருமை சிறுமை இல்லை என்று நேரில் வந்து கூறினாலும் இவர்கள் அதை ஏற்கப்போவதில்லை.

சிவாலய ஓட்டமானது சமய நல்லிணக்கத்துக்கு வழி காட்டுவதாகவும் உள்ளது. இது பற்றி ஒரு கதையும் உள்ளது. அது வருமாறு:

துவாபரயுகத்தில் புலியும், மனிதனும் இணைந்த தோற்றத் தில் ஒரு அதிசயமான மனித விலங்கு ஒன்று வாழ்ந்து வந்தது. அதற்கு "புருஷாமிருகம்" என்று பெயர். அது சிவனையே முழு முதற் கடவுளாக வழிபட்டு வந்தது. சிவநாமம் தவிர வேறு எந்தச் சொல்லையும் அது தன் செவியில் கேட்க விரும்பாது. அவ்விதம் வேறு நாமத்தை யாரும் கூறக்கேட்டால் அது அந்த இடத் திலேயே அறைந்து கொன்றுவிடும். அதேவேளை சிவன் கோவி லைக் கண்டால் உடனே குளித்துவிட்டு பூஜைக்கு உட்கார்ந்து விடுமாம். இந்த அற்புதமிருகத்தின் பால் அக்காலத்தில் யாகத் திற்கு முக்கிய புனிதப் பொருளாகக் கருதப்பட்டது. ஆனால், அதைப் பெற்றுக்கொள்வது மிகமிகச் சிரமமான காரியமாக இருந்தது.

ஒருமுறை பாண்டவர்கள் செய்யவிருந்த யாகத்திற்கு புரு ஷாமிருகத்தின் பால் தேவைப்பட்டது. அதைப் பெற்றுவருவதற்கு தருமர் பீமாசேனனை அனுப்பினார். அச்சமயம் அங்கிருந்த கண்ணபெருமான் பீமனிடம், "பீமா புருஷாமிருகம் மிகவும் வலிமை வாய்ந்தது. அதை அதன் இருப்பிடத்திலிருந்து வெளியே வரச் செய்யவேண்டுமாயின் சிவன் நாமத்தைத் தவிர வேறு நாமத்தைக் கூறவேண்டும் நீ, கோபாலா! கோவிந்தா! என்று எனது பெயரைக் கூறு. அது வெளியே வரும். ஒரு சமயம் அது

கோபத்தில் உன்னைத் தாக்கத் துரத்திவரக்கூடும். அவ்விதம் துரத்திவந்தால் நீ அதற்கு முன் இந்த உருத்திராட்சத்தைப் பூமியில் போடு. அது உன்னைக் காப்பாற்றும்" என்று கூறி பன்னிரண்டு உருத்திராட்சங்களை பீமனிடம் கொடுத்தனுப் பினார்.

பீமன் புருஷாமிருகம் வசித்து வந்த காட்டிற்கு வந்தான். புருஷாமிருகத்தை வெளிவரச் செய்வதற்கு சிவநாமத்தை விட்டு வேறு நாமம் கூற வேண்டும் என்று எண்ணி "கோவிந்தா! கோபாலா!" என்று குரலெழுப்பினான். அதனைக் கேட்டதும் புருஷாமிருகம் மிகவும் சினமடைந்து வெளியே வந்தது. சிவன் நாமத்தைக் கூறாது "கோபாலா! கோவிந்தா!" என்று கூவிய பீமனைத் தாக்குவதற்குத் துரத்தத் தொடங்கியது. அதன் வலிமை யையும், வேகத்தையும் கண்டு பயந்துபோன பீமாசேனன் ஓடத் தொடங்கினான். ஆனால் சொற்ப நேரத்திலேயே புருஷா மிருகத்திடம் அகப்பட்டுக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. அப்போது கண்ணன் கொடுத்த உருத்திராட்சத்தில் ஒன்றை புரு ஷாமிருகத்துக்கு முன்னால் பூமியில் போட்டான். அந்த ருத் திராட்சம் சிவலிங்கமாக மாறியது. அதன் முன்னே ஒரு குளமும் தோன்றியது. சிவலிங்கத்தைக் கண்டவுடன் புருஷாமிருகத்துக்கு பீமனைத்துரத்தும் எண்ணம் மறந்தது. குளத்தில் குளித்துவிட்டு சிவபூசையில் உட்கார்ந்துவிட்டது. கொஞ்சநேரம் சென்றது. பீமனின் களைப்பு மாறியது. தான் வந்த நோக்கம் நினைவிற்கு வந்தது. மீண்டும், "கோபாலா! கோவிந்தா!" என்று குரலெழுப் பினான். புருஷாமிருகம் கோபத்துடன் எழுந்து துரத்தத் தொடங் கியது. பீமன் மீண்டும் ருத்திராட்சத்தைப் போட்டான். சிவலிங்க மும் குளமும் தோன்றின. புருஷாமிருகம் பூசையில் அமர்ந்தது. இவ்விதம் ஓடுவதும் துரத்துவதுமாக பீமனின் கையில் இருந்த பன்னிரண்டு உருத்திராட்சங்களும் தீர்ந்துவிட்டன. புருஷாமிரு கத்தின் எல்லை முடிவடையச் சிறிது தூரமே இருந்தது. எனவே, இறுதி முயற்சியாக அதை ஜயித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் "கோபாலா! கோவிந்தா!" என்று கூவிக் கொண்டு பீமன் ஓடத் தொடங்கினான். புருஷாமிருகமும் உக்கிரமாகத் துரத்தத்

தொடங்கியது. இறுதியில் பீமனின் பாதியுடம்பு அதன் எல்லையிலும் பாதியுடம்பு எல்லைக்கு அப்பாலும் இருந்த நிலையில் அது பீமனின் காலைப் பிடித்துக்கொண்டது. அது பீமனைத் தனது எல்லைக்குள் இழுக்க முற்பட்டது. அச்சமயம் பீமன் அவலக் குரல் எழுப்பினான். அச்சமயம் தருமரும் அங்கு வந்து சேர்ந்தார். புருஷாமிருகம் தருமரிடம் நியாயம் கேட்டது. தருமரும் தம்பி என்றும் பாராமல் பீமனின் பாதியுடல் புருஷா மிருகத்துக்கே சொந்தம் என்று தீர்ப்பளித்ததுடன், மீதி பாதியுடலைத் தன்னிடம் கொடுக்கும்படியும், உடன் பிறந்தானின் ஈமைக்கிரியைகளைச் செய்யும் கடமை தனக்கிருப்பதாகவும் கூறினார். அத்தீர்ப்பைக் கேட்ட புருஷாமிருகம் மிகவும் மகிழ்ந்து பீமனை விட்டதோடு, யாகத்திற்கான பாலையும் வழங்கிச் சென்றது. பீமன் இட்ட பன்னிரு உருத்திராட்சங்களும் பன்னிரு சிவலிங்கங்களாகவும் அவற்றின்முன் பன்னிரு குளங்களும் தோன்றினவல்லவா? அவையே பின்னர் பன்னிரு சிவாலயங்களாக மாறின. இங்ஙனம் "கோபாலா! கோவிந்தா!" என்று பீமன் கூவிக்கொண்டு ஓடியதும் புருஷாமிருகம் துரத்தியதும் சிவனை வழிபட்டதும் ஆகிய இந்நிகழ்வு பின்னர் சிவாலய ஓட்டமாக குமரி மாவட்டத்தில் இன்றுவரை நடைபெற்று வருகிறது.

இது உண்மையா, கற்பனைக் கதையா என்று ஆராய்வதிலும் பார்க்க இதிலுள்ள தத்துவத்தைப் புரிந்து கொள்வதே அவசியம். புருஷாமிருகம் பீமனைப் பற்றிவைத்திருப்பதும், தர்மர் நியாயம் கூறுவதுமான அற்புதச் சிற்பங்கள் பாளையங்கோட்டைக்கு அண்மையில் கிருஷ்ணாபுரம் என்னும் கோவில் தூணொன்றில் அழகுற வடிக்கப்பட்டிருப்பதை அங்கு செல்பவர்கள் கண்டு ரசிக்கலாம். நான் பலதடவை அச்சிற்பத்தைக் கண்டு களித்துள்ளேன்.

சிவாலய ஓட்டமானது சிவராத்திரிக்கு முதல்நாள் நள்ளிரவு தொடக்கம் மறுநாள்வரை கிட்டத்தட்ட 24 மணிநேரமும் தொடர்ச்சியாக 100 கி. மீ வரை இப்பன்னிரு சிவாலயங்களை ஓடி, ஓடித் தரிசிப்பதாகும். இவ்விதம் ஓடும் பக்தர்கள் சிவராத்திரிக்கு ஒரு வாரம் முன்பே சிவனை எண்ணி கடும் விரதம்

இருப்பர். ஆண்கள் மட்டுமே சிவாலய ஓட்டத்தில் கலந்து கொள்வர். மேல் சட்டையின்றி கையில் விசிறி ஒன்றை மட்டும் கொண்டு கோபாலா! கோவிந்தா! என்று கோஷமிட்டுக் கொண்டு ஓடுவர். ஒவ்வொரு கோவிலை அடைந்ததும் அங்குள்ள குளத்தில் நீராடி, சிவன்முன் சென்று தாம் கொண்டுவந்த விசிறி யால் விசிறிக் கொள்வர். முதல் பதினொரு கோவில்களிலும் விபூதியும், பன்னிரண்டாவது கோவிலில் சந்தனமும் பக்தர் களுக்கு வழங்கப்படுகிறது.

சிவனுக்குகந்த சிவராத்திரி நன்னாளில் பெருமாளுக்குகந்த கோபாலா! கோவிந்தா! என்ற நாமங்களைக் கோஷிப்பது சைவ வைணவ ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அது மட்டுமன்றி இப்பன்னிரு தலங்களில் பெரும்பாலானவற்றில் சிவனுடன் விஷ்ணுவுக்கும் கோவில்கள் உள்ளன. பன்னிரண் டாவது தலமான திருநட்டாலத்தில் இறைவன் "சங்கர நாரா யணனாகவே" காட்சி தருகிறார்.

சிவாலய ஓட்டத்தில் பங்குபற்றாத ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் சிவராத்திரி தினத்தன்று ஆட்டோ, கார், பஸ், வான் போன்ற வாகனங்களில் இப்பன்னிரு திருக்கோவில் களுக்கும் சென்று தரிசித்து வரும் வழக்கத்தைக் கொண்டிருக் கின்றனர். குமரிமாவட்டத்தில் மட்டுமன்றி அருகிலுள்ள திருநெல் வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்தும் பக்தர்கள் இச்சிவா லயங்களைத் தரிசிப்பதற்காக சிவராத்திரியன்று வருவர்.

**பன்னிரு சிவாலயங்களின் விபரமும் வருமாறு:**

1. **திருமலை** - சிவாலய ஓட்டம் தொடங்கும் முதல் திருத்தலம் இதுவாகும். தற்போது முஞ்சிறை என்று அழைக்கப் படுகிறது. இச்சிவாலயம் மலைக்குன்றில் அமைந்துள்ளது. சிவன் கோவிலுக்கு வடக்கே விஷ்ணுவுக்கு தனி ஆலயம் உள்ளது.

2. **திக்குறிச்சி** - சிவாலய ஓட்டத்தில் இரண்டாவதாக இடம் பெறும் திருக்கோவில் இதுவாகும்.

3. **திருப்பரப்பு** - மூன்றாவது திருக்கோவில் திருப்பரப்பு அருவிக்கு அருகே அமைந்துள்ளது.

4. **திருநந்திக்கரை** - நான்காவது திருக்கோவில் - இக்கோவிலின் கருவறையைச்சுற்றி திருமாலின் தசாவதாரம் செப்புத் தகட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. உள்பிரகாரத்தில் மேற்கு நோக்கி திருமாலுக்கு கோவில் உள்ளது. இச்சிவாலயத் துக்கு அருகே குகைக்கோவில் ஒன்றும் உள்ளது.

5. **பொன்மனை** - இது ஐந்தாவதாக இடம்பெறும் கோவி லாகும்.

6. **திருப்பன்றிப்பாகம்** - சிவாலய ஓட்டத்தில் ஆறாவதாக இடம் பெறும் கோவில் இதுவாகும்.

7. **கல்குளம்** - இது ஏழாவது திருக்கோவில் - இது வரலாற்றுச் சிறப்புமிக்க பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே அமைந்துள்ளது.

8. **மேலாங்கோடு** - எட்டாவது திருத்தலம்

9. **திருவிடைக்காடு** - ஒன்பதாவது திருத்தலம். பதினெண் சித்தர்களில் ஒருவரான இடைக்காடர் சமாதியடைந்த இடத்தில் இக்கோவில் அமைந்துள்ளதாகக் கூறுவர்.

10. **திருவிதாங்கோடு** - பத்தாவது சிவத்தலம். சிவாலயத்துக்குத் தெற்கே மகாவிஷ்ணுவுக்குத் தனியான சன்னிதி உண்டு.

11. **திருப்பந்திபோடு** - பதினொராவது திருத்தலம்

12. **திருநட்டாலம்** - சிவாலய ஓட்டத்தின் இறுதித் திருத்தலம். இங்கு இறைவன் சங்கர நாராயணனாகக் காட்சியளிக் கிறார்.

## ३. நவராத்திரி

தசரா அல்லது நவராத்திரி வரப்போகிறது என்றாலே பாளையங்கோட்டை களைகட்டத் தொடங்கிவிடும். மைசூருக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் பாளையங் கோட்டையில்தான் நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகக் கூறுவர். நவராத்திரிக்கு முன்வரும் அமாவாசையன்று இங்குள்ள அம்மன் கோவில்களில் மேளதாளத்துடன் பந்தல்கால் நாட்டுவதுடன் நவராத்திரிவிழாவுக்குரிய கலகலப்பு ஆரம்பமாகிவிடும். (தமிழ் நாட்டில் அமாவாசையை நல்லநாளாக நிறைஞ்ச நாளாகக் கருதுவர்) ஒவ்வொரு வீடுகளிலும் வெளியூர்களில் வேலை பார்ப்பவர்கள் விடுமுறையில் வந்துவிடுவர். அத்துடன் வெளியூர் களில் இருந்து உறவினர்கள், நண்பர்கள் என்று பலரும் வந்து குழுமி விடுவர். காலை, மாலை வீட்டுவாயில்களை அழகான கோலங்கள் அலங்கரிக்கும்.

பாளையங்கோட்டைச் சூழலில் அமைந்துள்ள பாளை வடக்கு முத்தாரம்மன், பாளை வடக்கு உச்சினி மாகாளியம்மன், பாளை தேவி தூத்துவாரி அம்மன், பாளை கிழக்கு உச்சினி மாகாளி அம்மன், பாளை வடக்கு முப்பிடாதி அம்மன், பாளை கீழரதவீதி உச்சினி மாகாளியம்மன், பாளை ஆயிரத்தம்மன், வண்ணார்பேட்டை பேராத்துச் செல்வி அம்மன், பாளை தெற்கு முத்தாரம்மன், பாளை யாதவர்தேவி ஸ்ரீ உச்சினிமாகாளியம்மன்

ஆகிய பத்து திருக்கோவில்களும் இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை. இதில் தலைமைக் கோவிலாக விளங்குவது ஆயிரத்தம்மன் கோவிலாகும்.

நவராத்திரி ஒன்பது நாளும் இக்கோவில்களில் பக்தர்கூட்டம் நிரம்பி வழியும். தினம் ஒரு அலங்காரத்தில் ஒவ்வொரு அம்பாளும் பக்தருக்குத் தரிசனம் தருவார். பத்தாம் நாள் விஜயதசமியன்று ஒவ்வொரு அம்மனும் தனித்தனி முத்துச் சப்பரத்தில் அமர்ந்து பல்வேறு வீதிகளின் வழியாகப் பவனிவந்து அதிகாலை வேளையில் பாளை தெற்குரதவீதி முடிவில் இராமர் கோவில் திடலில் ஒன்று கூடுவர். அன்று இரவு பெரும்பாலும் அச்சுற்றாடலில் உள்ள மக்கள் உறங்குவதில்லை. வீட்டு வாசலை துப்பரவு செய்து கோலமிட்டு அம்பாள் வீட்டுவாசலில் வரும்போது அர்ச்சனைசெய்து தரிசிப்பர்.

அம்பாள் வரும் சப்பரத்துக்கு முன்னால் கலையாடு வோர், குறிசொல்வோர் முதலானோரும் வருவதுண்டு. ஒருவர் இரண்டு தடவை எனக்கு சொன்ன குறி பலித்ததை நிதர்சன மாகக் கண்டேன்.

பத்து முத்துச் சப்பரங்களில் தெய்வீக அலங்காரங் களுடன் காட்சிதரும் அம்பாளைத் தரிசிக்க கண்கள் கோடி வேண்டும். பத்துச் சப்பரங்களும் வந்து சேர்ந்ததும் அவை ஒரே வரிசையில் நிறுத்தப்பட்டு ஒரே சமயத்தில் தனித்தனி கர்ப்பூர ஹாரத்தி செய்யப்படும். உள்ளம் உருக பக்தர்கள் அம்பாளைப் பிரார்த்தித்து நிற்கும்காட்சி நெஞ்சை நெகிழ வைக்கும்.

கர்ப்பூராரத்திக்குப் பிறகு ஒவ்வொரு அம்மனும் தத்தம் திருக்கோவிலை நோக்கி கீழரதவீதி, வடக்கு ரதவீதியாக சப்பரத்தில் செல்ல ஆரம்பிப்பர். ஒவ்வொரு சப்பரத்துக்கு முன்பும் பல்வேறு வேடம் தரித்தவர்கள், முகமூடி அணிந்த வர்கள் கிராமிய நடனங்கள் ஆடிச்செல்வதையும் காண லாம்.(நவராத்திரி ஆரம்பமாகிறது என்றவுடனேயே பல பக்தர் கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் பொருட்டு

பல்வேறு வேடம் தரித்து வீடுகள், கடைகள், சந்தை முதலிய இடங்களில் காணிக்கை செலுத்தப்பணம் சேகரிப்பதையும் காணலாம்.) பலவித வாத்தியங்கள் முழங்க அம்பாள் பவனி வருவாள். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் மீண்டும் அர்ச்சனை செய்து வணங்குவதைக் காணலாம். நான் வடக்கு ரத வீதியில் தங்கியிருந்த இரண்டு வருடங்கள் இத்தரிசனத்தை முழுமை யாகச் செய்ய முடிந்தது. காலையில் ஒவ்வொரு சப்பரமாக புறப்பட்டுச் செல்ல ஆரம்பித்தாலும் இறுதியாக இந்த பத்து அம்பாள்களில் தலைவியாகக் கருதப்படும் ஆயிரத்தம்மனின் சப்பரம் வடக்கு ரதவீதி வழி செல்லும் போது பெரும்பாலும் பிற்பகல் மூன்று, நான்கு மணியாகிவிடும்.

அன்றையதினம் பாளையங்கோட்டை விடுமுறை நாளாக கடை, சந்தை முதலியன மூடப்பட்டிருக்கும். ஆனால் நகரம் பக்தி வெள்ளத்தில் மூழ்கியிருக்கும்.

தமிழ்நாட்டிற்கு நவராத்திரி காலத்தில் (செப்ரம்பர் மாதத்தில்) செல்பவர்கள் முடிந்தால் அக்காலத்தில் பாளையங் கோட்டையில் தங்கி நவராத்திரி விழாவைக் கண்டு களித்து, தரிசனமும் செய்யலாம்.

**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

**கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று.**

**- வள்ளுவம்**

## 4. நவதிருப்பதி

பாளையங்கோட்டையில் நாங்கள் மூன்றுவருடங்களும் தங்கியிருந்த வீட்டுச் சொந்தக்கார அம்மாவின் பூர்வீகம் ஆந்திரா. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர். ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். ராஜகாந்தம் என்பது அவர் பெயர். கணவர் இறந்துவிட்டார். இரண்டு பையன்கள். அந்த அம்மா ஒரு தீவிர வைஷ்ணவ பக்தை என்று கூறலாம்.

காலையில் வேலைக்குப் போவதற்கு முன்பும், மாலையில் வேலையால் வந்தபின்பும் அருகிலுள்ள இராமர் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்வது அவரது வழக்கம். மழை, வெய்யில், நோய், நொடி எதுவும் அவரது இந்த நியமத்தை மாற்றி நாம் காணவில்லை. அதுமட்டுமன்றி ஒவ்வொரு சனிக்கிழமையும் இராமர் கோவிலில்உள்ள ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை கட்டிக் கொடுப்பதும் அவரது வழக்கம். தமிழ்நாட்டில் பெருமாள் கோவில்களில் சனிக்கிழமைகளில் விசேடம். (இங்கு வல்லிபுரக் கோவிலுக்கு ஞாயிற்றுக்கிழமை களில் விசேடம் போல) திருநெல்வேலி மாவட்டத்தில் எந்தக் கோவிலில் என்றைக்கு என்ன விசேடம் என்பது அந்த அம்மாவுக்கு அத்துப்படி. வெளிநாட்டிலிருந்து வந்து பாளை யங்கோட்டையில் தங்கியிருந்த நாங்கள் அவற்றிலெல்லாம் கலந்து கொள்ளவேண்டும் என்பது அவரின் விருப்பம். நாங்கள் படிக்க வந்திருக்கிறோம் என்று கூறினாலும் அவர் கேட்க



நவதிருப்பதி தரிசனத்தில் பெருங்குளம் கோவில்
வழிபாட்டில் அன்னை

மாட்டார். படிப்பை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். முதலில் பகவானைத் தரிசனம் பண்ணுங்கோ என்று கூறுவார். அவரின் அன்புத் தொல்லை காரணமாக தென்திருப்பதி, கிருஷ்ணாபுரம், நாங்குனேரி, திருச்செந்தூர், கெற்வெல் ஆஞ்சநேயர் கோவில், கோபாலசுவாமி கோவில், நவதிருப்பதி என்று பல கோவில் களுக்குச் சென்று தரிசனம் செய்யும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

இதில் நவதிருப்பதி என்னும் ஒன்பது திருத்தலங்களும் தாமிரபரணி நதியின் இருபுறமாக பாளையங்கோட்டை திருச்செந்தூர் நெடுஞ்சாலையை அண்மித்து அமைந்துள்ளன. அவை வருமாறு:

1) ஸ்ரீ வைகுண்டம் அல்லது திருவைகுண்டம்
2) நத்தம் அல்லது திருவரகுணமங்கை
3) திருப்புளியங்குடி
4) இரட்டைத் திருப்பதி எனப்படும் திருத்தொலைவில்லி மங்கலம் (இங்கு இரண்டு திருக்கோவில்கள் அருகா மையில் அமைந்துள்ளன.)
5) பெருங்குளம் அல்லது திருக்குளந்தை
6) தென்திருப்பேரை அல்லது திருப்பேரை
7) திருக்கோளூர்
8) ஆழ்வார் திருநகரி அல்லது திருக்குருகூர்

இந்த ஒன்பது திருக்கோவில்களும் நவக்கிரகங்களுடன் தொடர்புபடுத்தி கூறுவர். இவற்றை ஒரே தடவையில் சென்று தரிசித்து வந்தால் நவக்கிரகங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக் களிலிருந்து விடுபடலாம் என்றும் கூறுவர். (சிலர் நவக்கிரகங் களும் பெருமாளின் திருவடியிலேயே எழுந்தருளியிருப்பதாகக் கூறுவர்.

| | | |
|---|---|---|
| 1) திருவைகுந்தம் | - | சூரியன் |
| 2) திருவரகுணமங்கை | - | சந்திரன் |
| 3) திருப்புளியங்குடி | - | புதன் |

| | | |
|---|---|---|
| 4) திருக்குளந்தை | - | சனி |
| 5,6) இரட்டைத் திருப்பதி | - | ராகு, கேது (தெற்கு), (வடக்கு) |
| 7) தென்திருப்பேரை | - | சுக்கிரன் |
| 8) திருக்கோளூர் | - | செவ்வாய் |
| 9) திருக்குருகூர் | - | வியாழன் |

திருக்குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரி வைஷ்ணவ ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் அவதரித்த புண்ணிய பூமியாகும். இவ்வாலயத்தின் தலவிருட்சமாக உள்ளது உறங் காப்புளியாகும். அதாவது இரவிலும் இதன் இலைகள் மூடிக் கொள்வதில்லையாம். ஆழ்வார் திருநகரியில் வைகாசி மாதம் நம்மாழ்வார் திருநட்சத்திரமான விசாகத்தை ஒட்டி ஆண்டு தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருநாளில் ஐந்தாம் திருநாளன்று நவதிருப்பதிப் பெருமாளும் ஆழ்வார் திருநகரி எழுந்தருளி நம்மாழ்வாரால் மங்களாஸாஸனம் செய்விக் கப்படுகின்றனர். மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வாருக்கு மங்களா ஸாஸனம் செய்கின்றார். அன்று இரவு ஒன்பது பெருமாளும் கருடவாகனத்திலும், நம்மாழ்வார் அன்னவாகனத்திலும், மதுர கவி ஆழ்வார் பரங்கி நாற்காலியிலும் எழுந்தருளி ஒன்று சேர்ந்து வீதி உலா செய்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். பல்லா யிரக்கணக்கான மக்கள் இத்திருநாளில் இங்குவந்து தரிசனம் செய்வது வழக்கம்.

நவதிருப்பதித் தலங்களை வழிபடுவதற்கு மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசி அல்லது சொர்க்கவாசல் ஏகாதசியும் குறிப்பிடக்கூடிய ஒரு விசேட நாளாகும். அன்று பல ஊர்களில் இருந்தும் வரும் பக்தர்கள் இத்தலங்களுக்குச் சென்று சேவிப்பது வழக்கம். கார் அல்லது வான் ஒன்றை அமர்த்திக் கொண்டு காலையில் புறப்பட்டால் மாலைக்குள் ஒன்பது திருத்தலங்களையும் தரிசித்துவிட்டு வரலாம். ஏனெனில் வைகுண்ட ஏகாதசி அன்று கூட்டம் ரொம்ப அதிகமாக இருக்கும். தர்மவழி, சிறப்பு வழி இரண்டிலுமே வரிசை மிக நீளமாக

இருக்கும். நாங்கள் வீட்டுக்கார அம்மாவுடன் 1999 ஆம் ஆண்டு மார்கழி சொர்க்கவாசல் ஏகாதசி அன்று ஒரு காரில் காலை 6 மணிக்கு புறப்பட்டுச் சென்று முதலில் ஸ்ரீவைகுண்டத்தில் ஆரம்பித்து ஆழ்வார் திருநகரி ஈறாக ஒழுங்குமுறையில் (ஒழுங்கு முறையில்தான் நவதிருப்பதி தரிசனம் செய்ய வேண்டும்.) தரிசனம் செய்துவிட்டு மாலை 4 மணிக்கு வீடு திரும்பினோம்.

ஒவ்வொரு பெருமாள் கோவிலிலும் சொர்க்கவாசல் மண்டபம் என்று ஒன்றுண்டு. சொர்க்கவாசலன்று மாலை பெருமாள் தாயாருடன் (பூதேவி, ஸ்ரீதேவி) சொர்க்கவாசல் மண்டபத்தில் எழுந்தருளி காட்சிகொடுப்பார். அக்காட்சியைக் கண்டு தரிசிப்பதற்கு கொடுத்துவைத்திருக்க வேண்டும்.

மார்கழி மாதத்தில் தமிழ்நாடு செல்வோர் சந்தர்ப்பங் கிடைத்தால் சொர்க்கவாசல் ஏகாதசியன்று திருநெல்வேலியில் தங்கிநின்று நவதிருப்பதி சென்று தரிசித்து அருள் பெறலாம்.

**அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.**

**நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.**

**- வள்ளுவம்**

## 5. திருப்பதி தரிசனம்

*திருப்பதி தமிழ்நாட்டு எல்லைக்கு அப்பால் ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. நான் தொடக்ககாலத்தில் (1997 ஜுலை - ஓகஸ்ட்) ஒரு மாதம்வரை சென்னையில் தங்கியிருந் திருக்கிறேன். அப்போது சென்னையிலுள்ள பல கோவில்களுக் கும் சென்று தரிசித்திருக்கிறேன். சென்னையிலிருந்து காலை புறப்பட்டுச் சென்றால் திருப்பதி சென்று தரிசித்துவிட்டு இரவு 8, 9 மணிக்குள் சென்னை திரும்பிவிடலாம். ஆனால் எனக்கு ஏனோ திருப்பதி சென்றுவர வேண்டும் என்ற எண்ணம் ஆரம் பத்தில் எழவேயில்லை.*

*1998 ஆம் ஆண்டு மார்கழிமாதம் எனது தங்கையும், மைத்துனரும் தலயாத்திரைக்காக இலங்கையிலிருந்து வந்து எம்முடன் பாளையங்கோட்டையில் தங்கியிருந்தனர். ஒருநாள் மத்தியானம் 2 மணியளவில் நான் வீட்டில் உறங்கிக் கொண்டி ருந்தபோது வீதியில் எமது வீட்டுக் கேற்றருகிலிருந்து, "திருப்பதி வெங்கடாசலபதி அழைக்கிறான்" கோவிந்தா! கோவிந்தா!" என்று யாரோ உரத்துச் சத்தமிட்ட குரல் கேட்டது.*

*யாரோ பிச்சைக்காரனாக இருக்கும் என்று நான் நினைத் தாலும் அக்குரல் என்னுள் ஊடுருவிப் பாய்ந்ததை என்னால் உணர முடிந்தது. மேலும் இரண்டு தடவைகள் அவ்விதம் சத்தம் கேட்டது. நான் எழும்பி வந்து பார்த்தபோது யாரையும் காண வில்லை. இச்சம்பவத்திற்கு இரண்டு நாள் கழித்து எனது*

சகோதரிக்கும், மைத்துனருக்கும் சென்னையைச் சுற்றிக்காட்டு வதற்காக ஒரு வாரம் விடுமுறை பெற்று நாம் சென்னைக்குச் சென்றோம். எனது சகோதரியும் மைத்துனரும் சில நாட்களுக்கு முன்னர் ஒரு சுற்றுலா பேரூந்தில் திருப்பதி சென்று வந்திருந் தனர்.

எனவே, சென்னைப் பயணத்தில் திருப்பதி செல்லும் எண்ணம் எமக்கு இருக்கவில்லை. இரண்டு நாட்களில் சென்னை யில் முக்கியமான இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். நாங்கள் சென்னையில் மயிலாப்பூரில் கபாலீஸ்வரர் கோவிலுக்கு அருகில் பிருந்தாவன் லொட்ஜில் தங்கி இருந்தோம். எனவே, தினமும் காலையில் எழுந்தவுடன் குளித்துவிட்டு கபாலீஸ்வரர் கோவிலுக் குச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தோம்.

ஒருநாள் (கிறிஸ்மஸ் இற்கு முதல்நாள்) காலையில் கபாலீசுவரர் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது அடுத்த நாள் திருப்பதிக்குப் போய்வந்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. திரும்பி வரும்போது கட்டாயம் போய்வரவேண்டும் என்ற ஆசை மேலோங்கிவிட்டது, நாங்கள் தங்கியிருந்த பிருந் தாவன் லொட்ஜில் திருப்பதி சென்றுவரும் சுற்றுலா பஸ்ஸில் இடம் ஒழுங்குபடுத்தி கொடுக்கும் வழக்கம் உண்டென்று ஏற் கெனவே அறிந்திருந்தேன்.

நாங்கள் திருப்பதி சென்றுவர விரும்புவதை அறிந்த எனது சகோதரியும் மைத்துனரும் தாங்களும் வருவதாகக் கூறினர். எனவே எங்கள் நான்கு பேருக்கும் சேர்த்து திருப்பதி சென்றுவர பஸ் ஒழுங்கு பண்ணித்தரும்படி லொட்ஜ் மனேஜரிடம் கேட் டோம். அவரும் சுற்றுலா பஸ் ஒன்றில் எங்களுக்கு இடம் Book பண்ணிக் கொடுத்தார். 1998 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் அன்று காலை நாங்கள் திருப்பதி புறப்பட்டுச் சென்றோம்.

மார்கழி மாதம் நத்தார் பண்டிகை. எனவே கூட்டம் ரொம்ப அதிகம் இருக்காது என்று நாங்கள் நினைத்திருந்தோம். ஆனால் எமது பஸ் முற்பகல் 11.00 மணியளவில் திருப்பதி மலை அடிவாரத்தை அடைந்தபோதுதான் எமது நினைப்பு எவ்வளவு தவறு என்று புரிந்தது.

பல லட்சக்கணக்கான பக்தர்கள் பெருமாளைத் தரிசிப் பதற்காக அந்த மார்கழி மாதத்தில் வந்தவண்ணம் இருந்தனர் (அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் பார்க்க பக்தர் தொகை இம்முறை பல மடங்கு அதிகம் என்றார்கள்) உள்ளூர் வானொலி, மற்றும் தொலைக்காட்சி, பத்திரிகைகளில் சில நாட்களுக்கு வெளியூர்களில் இருந்து பக்தர்களை வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டதாக நாம் அங்கு சென்ற பின்னர்தான் அறிந் தோம் (ரோக்கன் முறை எதுவும் அச்சமயம் அறிமுகப்படுத்தப் பட்டில்லை) நாங்கள் எப்படியோ கூட்டத்துக்குள் சென்று திருப்பதியை அடைந்தோம்.

அங்கு முடி காணிக்கை (மொட்டை போட்டுவிட்டு) செலுத்தி குளித்துவிட்டு தரிசனத்துக்குச் சென்ற போது பகல் மணி இரண்டு. கூட்டம் ஆஞ்சநேயரின் வாலைப் போல நீண்டு கொண்டேசென்றது. அக்கூட்டத்தில் சென்றால் இரண்டு நாட் களித்துத்தான் பெருமாளைத் தரிசிக்க முடியும் என்ற எண்ணமே ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட்டது.

பல அடியார்கள் வெளியே நின்று கோபுர தரிசனத்துடன் திரும்பிக் கொண்டிருந்தனர். இவ்வளவுதூரம் வந்தபின்னர் பெரு மாளைத் தரிசிக்காமல் செல்வதா என்று ஏங்கிய வண்ணம் தரிசனத்துக்காகக் காத்து நின்றவர்கள் வரிசையில் நாமும் போய்ச் சேர்ந்து கொண்டோம்.

வரிசை நகர்வதாகவே தெரிய வில்லை. இதற்குள் இரவும் வந்துவிட்டது. எம்முடன் பஸ்ஸில் வந்த பலரும் தரிசனம் செய்யாமல் திரும்பிவிட்டனர். பஸ் கண்டக்டர் எம்மையும் திரும்பி வரும்படியும், சென்னை திரும்பப் போவதாகவும் வற்புறுத்திக் கொண்டிருந்தார். நாங்கள் தரிசனம் செய்யாமல் வரமாட்டோம். நீங்கள் போவதானால் போய் விடுங்கள் என்று கூறிவிட்டோம்.

இரவு ஏறஏற மலையில் மார்கழிமாதப் பனிக்குளிர் வாட்டத் தொடங்கியது. அதை எதிர்கொள்வதற்கு எந்தவிதத்திலும் தயா ராக வந்திருக்காத எமக்கும் குளிர் கஷ்டத்தைக் கொடுத்தது. ஆயினும் வரிசையில் நிமிடத்துக்கொருதரம் எழுந்து கொண்டி ருந்த கோவிந்தா' கோவிந்தா' என்னும் கோஷம் குளிரையும் பனியையும் மறக்கச் செய்துகொண்டிருந்தன.

இரவு சுமார் 12 மணிக்கு எங்கள் வரிசை நகர்ந்து உட்பிரகாரத்துக்குள் சென்றது. அங்கு பெரிய மண்டபங்களில் பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. அர்த்தசாமப் பூஜை முடிந்து நடை சாத்தப்பட்டுவிட்டதால் மறுநாள் காலையில்தான் தரிசனம் பண்ணமுடியும் என்றுகூறி எம்மை அந்த மண்டபங்களில் உட் காரவைத்துவிட்டனர். திருப்பதி கோவிலில் அவ்விதம் பெரு மாளைத் தரிசிக்க காத்திருந்ததில் எமக்கு மிகவும் திருப்தியான ஒரு அநுபவமாக இருந்தது. ஏறத்தாள அந்த இரவு முழுவதும் எமக்கு "சிவ" ராத்திரியாகத்தான் இருந்தது. தூங்காமல் தூங்கிக் கொண்டிருந்தோம்.

மறுநாள் சனிக்கிழமை (இந்தியாவில் பெருமாள் கோவில் களில் சனிக்கிழமை விஷேட நாளாகக் கொள்கிறார்கள். பெரு மாளைச் சேவிக்க அந்நாள் சிறந்ததாகக் கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமையை அவ்விதம் கொள் கிறார்கள்) அன்று காலை 6 மணிக்கு மீண்டும் பெருமாளைத் தரிசிக்க அநுமதிக்கத் தொடங்கினார்கள். நாங்களும் அதிக தாமதமின்றி வரிசையில் முன்னே சென்றோம். கருவறைக்கு முன்னால் வரிசை நகர்ந்து கொண்டிருந்தபோது ஸ்ரீ வெங்க டாசலபதியின் தரிசனம் வார்த்தைகளால் விபரிக்கமுடியாத ஒரு தெய்வீக உணர்ச்சியை என்னுள் ஏற்படுத்தியது.

பெருமாள் சந்நிதியில் என்ன வேண்டுவது? எப்படி வணங்கு வது? என்றே புரியவில்லை. "பெருமாளே, வாழ்க்கையில் எமக்கு எல்லாவற்றையும் கொடுத்த தாங்கள் குழந்தைச் செல்வத் தையும் கொடுத்தருளுங்கள் அடுத்த தடவை வரும்போது எமது குழந்தையைத் தங்கள் தரிசனத்துக்கு எடுத்துவரும் பாக் கியத்தை எமக்குக் கொடுத்தருளுங்கள் "என்று மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டேன். ஏறத்தாள அதே பிரார்த்தனை யையே எனது மனைவியும் செய்து கொண்டதாகப் பின்னர் அறிந்தேன்.

பெருமாள் தரிசனம் முடிந்து வெளியே வந்தபின்னர் உட் பிரகாரத்தை வலம் வந்து வணங்கலாம். இவ்வளவு நேரமும் நெருக்கியடித்துக் கொண்டிருந்த கூட்டம் இப்போது இருக்காது நிதானமாகத் தரிசிக்கலாம். அதன்பிறகு பெருமாளுக்கு இயன்ற

காணிக்கையை செலுத்திவிட்டு வெளியே வந்தால் வரிசையாக தொன்னைகளில் பிரசாதம் வழங்கப்படும். புளியோதரை, தயிர்ச்சாதம், கூட்டாஞ்சோறு என்று பிரசாதங்கள் வழங்கப்படும். அவற்றை வாங்கி சாப்பிட்டுவிட்டு கையலம்பிவிட்டு வெளியே வரலாம். திருப்பதி பெருமாளின் சிறப்பு பிரசாதமான லட்டு வாங்குவதற்கு ரோக்கன் வாங்கியவர்கள் அதைக் கொடுத்து லட்டு வாங்கிக் கொள்ளலாம். பிறகு சாவகாசமாக வெளிவீதியை வலம்வந்து வணங்கிவிட்டு திரும்பலாம்.

நாங்கள் திருப்பதி வந்த பஸ்ஸில் எம்முடன் கூடவந்த பலரும் கூட்டத்தைக்கண்டு திரும்பிவிட்டார்கள் என்று கூறியிருந்தேனல்லவா? எனவே, நாங்கள் வேறு பஸ் ஒன்றில்ஏறி மலையிலிருந்து கீழே வந்து சேர்ந்தோம். அங்கு ஒரு ஹோட்டலுக்குச் சென்று எமது மதிய உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாகவோ, பெருமாளின் கிருபையாலோ எம்மை அழைத்துவந்த பஸ் நடத்துனர் அங்கு வந்து சேர்ந்தார். எங்களைக் கண்டவுடன் மகிழ்ச்சியுடன் வந்து, "சார் தரிசனம் கிடைத்ததா?" என்று விசாரித்துவிட்டு அவர் வேலை செய்த பஸ் கம்பெனியின் வேறொரு பஸ்ஸில் எம்மை இல்வசமாக சென்னைவரை கூட்டிவந்து விட்டுச்சென்றார்.

நாங்கள் பாளையங் கோட்டை திரும்பிய பின்னர், எனது நண்பர்கள், "திருப்பதி சென்று தரிசனம் செய்துவிட்டு வந்தால் 3,4 மாதங்களுக்குள் நல்லது நடக்கும் என்று கூறினார்கள்!" அவர்களின் அநுபவ வார்த்தையும், எங்கள் வேண்டுதலும் பலித்தது. நாங்கள் மீண்டும் ஓராண்டு கழித்து திருப்பதி சென்றபோது எமது குழந்தையையும் எடுத்துச் செல்லும் பாக்கியம் கிடைத்தது. விஞ்ஞானம் வளர்ந்து விட்டது; மருத்துவம் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது என்றெல்லாம் கூறுகிறோம்.

ஆனால்,அதற்கு அப்பாலும் இறையருள் என்று ஒன்றுள்ளது. அது இல்லா விட்டால் விஞ்ஞானத்தால் எவ்வித பலனும் இல்லை. குழந்தை இல்லாதவர்கள் பிள்ளைவரம் வேண்டி காசி, இராமேசுவரம் செல்வதையும் அரசமரத்தைச் சுற்றிவருவதையும் இடைக்காலத்தில் கேலி செய்தவர்களுண்டு. ஆனால், விஞ்ஞானம் முடியாது என்று கைவிட்ட சிலருக்கு இந்த காசியும், இராமே

சுவரமும், அரச மரமும் கைகொடுத்த காட்சியை நேரில் கண் டவர்களும் இருக்கிறார்கள். எனது தகப்பனாரின் தாயார் அதா வது பாட்டியாருக்கு பல குழந்தைகள் பிறந்து, சொற்ப நாட்க ளில் இறந்து விடுவது வழக்கமாக இருந்ததாம்.

அதனால் மனம் மிகவருந்திய பாட்டியும், பாட்டனாரும் இராமேசுவரம் சென்று வேண்டிக் கொண்டனர். அதன் பயனாக எனது தகப்பனார் பிறந்ததும் அவருக்கு இராமேசுவரம் தீர்த்தங்களில் ஒன்றான சேதுமாதவர் தீர்த்தத்தை மனதிற் கொண்டு சேதுமாதவர் என்று பெயரிட்டு வைத்தனர். எனது தகப்பனாருக்குப் பிறகு இரண்டு ஆண் குழந்தைகள் அவர்களுக்குப் பிறந்தன. மூவரும் தேகாரோக் கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர்.

திருப்பதி தரிசனம் என்று தொடங்கி எங்கோ சென்று விட்டேன். ஆனால், தெய்வஅருள் வாழ்க்கைக்கு அவசியம் என்று கூறவே இதை எழுத வேண்டியதாயிற்று. திருப்பதிக்கு நாங்கள் மூன்று தடவை செல்ல இறையருள் கிடைத்தது. எமது இரு குழந்தைகளின் முடிகாணிக்கையை பெருமாள் திருவடிகளில் சமர்ப்பித்துவர சந்தர்ப்பம் கிடைத்ததும் திருவருளாலேயே யாகும்.

திருப்பதி மலை அடிவாரத்தில் பத்மாவதி தாயார் கோவில் உள்ளது. கண்ணப்பநாயனாரால் பெருமையுற்ற காளகஸ்தி அல்லது திருக்காளத்தி கோவிலும் திருப்பதிக்கு அருகிலேயே உள்ளன. திருப்பதியில்இருந்து சென்னை திரும்பும் வழியில் ஆறுபடைவீடுகளில் ஒன்றான திருத்தணிகை உள்ளது.


**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்**

**- வள்ளுவம்**

## 6. கடலுக்குள் ஒரு நவக்கிரக கோவில்

2000ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எமது இறுதிப் பரீட்சைகள் முடிவடைந்துவிட்டன. நாம் விரைவில் இலங்கை திரும்ப வேண்டியிருந்தது. அதற்கிடையில் இராமேசுவரம், தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள முக்கிய சிவாலயங்களை தரிசித்துவிட்டு (இங்கு நான் சிவாலயங்கள் என்று கூறுவது பெருமாள் கோவில்களையும் உள்ளடக்கியே) வந்து விடவேண்டும் என்று விரும்பினோம். கைக்குழந்தையையும் கொண்டுசெல்ல வேண்டியிருந்ததால் வான் ஒன்றை ஒழுங்கு செய்துகொண்டு புறப்பட்டோம். முதலில் இராமேசுவரத் துக்குச் சென்றோம். இராமேசுவரக் கடல் மிகவும் அமைதியாக இருந்தது. அதில் மூழ்கி எழுந்து, பின்னர் முறைப்படி இருபத் திரண்டு தீர்த்தங்களிலும் நீராடினோம். இறுதியாக கோடி தீர்த்தத்தில் நீராடினோம்.

இராமேசுவரத்தில் தீர்த்தமாடுவதற்கு நாம் தீர்த்தங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை. கடலில் நீராடிவிட்டு கோவில் வாசலுக்கு வந்தால் அங்கு சிறிது பணம் வாங்கிக் கொண்டு தீர்த்தமாட உதவுவதற்கென்றே சிலர் இருக்கிறார்கள். அவர்களிடம் பேசிமுடித்தவுடன் அவர்களாகவே அழைத்துச் சென்று ஒழுங்குமுறையில் ஒவ்வொரு தீர்த்தத்திலிருந்தும் தலைக்கு ஒரு வாளி என்று அள்ளித் தலையில் ஊற்றிவிடுவார்கள். இராமேசுவரத்திலுள்ள முக்கியமான இருபத்திரண்டு தீர்த்தங்களின் விபரமும் வருமாறு:



தேவிபட்டினம் – கடலுக்குள் நவக்கிரகங்கள்



இராமேசுவரத்தில் கடலில் நீராடிவிட்டு வரும் அன்னை

1. மகாலக்ஷ்மி தீர்த்தம்
2. சாவித்திரி தீர்த்தம்
3. காயத்திரி தீர்த்தம்
4. சரஸ்வதி தீர்த்தம்
5. சேதுமாதவர் தீர்த்தம்
6. நள தீர்த்தம்
7. நீல தீர்த்தம்
8. காவ யா தீர்த்தம்
9. கவாக்ஷ தீர்த்தம்
10. கந்தமாதன தீர்த்தம்
11. பிரம்மஹத்தி விமோசன தீர்த்தம்
12. சக்கர தீர்த்தம்
13. சூரிய தீர்த்தம்
14. சந்திர தீர்த்தம்
15. சங்க தீர்த்தம்
16. கங்கா தீர்த்தம்
17. ஜமுனா தீர்த்தம்
18. காஜா தீர்த்தம்
19. சிவ தீர்த்தம்
20. சத்தியாமிர்த தீர்த்தம்
21. சர்வ தீர்த்தம்
22. கோடி தீர்த்தம்

கோடி தீர்த்தம் எல்லாத் தீர்த்தங்களும் சேர்ந்தது என்றும் கங்கையில் நீராடுவதால் ஏற்படும் பலன் இதனால் உண்டாகும் என்றும் கூறினார்கள். நாங்கள் தீர்த்தமாடிக் கொண்டிருந்தபோது மழை தூறல் போட்டுக்கொண்டிருந்தது. அதன் பின்னர் சுவாமி தரிசனம் முடித்துவிட்டு கந்தமாதனம் என்ற இடத்துக்குச் சென் றோம். சிறு குன்று போலிருந்த அவ்விடத்தில் இராமர்பாதம் பதிந் திருப்பதாகக் கூறினார்கள். அங்கிருந்து பார்த்தபோது இராமேசு வரச் சூழலும் கடலும் அழகாகக் காட்சியளித்தன. அதன் பின்னர் லட்சுமண சுவாமி கோவிலுக்குச் சென்றோம். ஓரிடத்தில் நீரில் கல்லொன்று மிதந்து கொண்டிருந்த காட்சியைக் கண்டோம்.

இராமர் அணைகட்டியபோது பயன்பட்ட கற்களில் அது ஒன்று, என்றும் கூறினார்கள். இராமேசுவரத்தில் சிறியதும் பெரியதுமாக பல கோவில்கள் உள. அவற்றையெல்லாம் தரிசிக்க ஒருநாள் போதாது. அத்துடன் இராமாயணத்துடன் சம்பந்தப்பட்ட பல வரலாற்றுச் சின்னங்களும், கர்ணபரம்பரைக் கதைகளும் உள. நாங்கள் இராமேசுவரத்துக்கு அதிகாலையில் சென்றுவிட்டதால் காலை 10 மணிக்குள் முக்கியமான சில இடங்களுக்குச் சென்று விட்டு, பிள்ளையார் பட்டியை நோக்கிப் புறப்பட்டோம். நண்பகல் 12.00 மணியளவில் தேவிப்பட்டணம் என்ற ஊரை அடைந்தோம். என்னுடன் பட்ட மேற்படிப்பை மேற் கொண்டிருந்த நண்பர்களில் ஒருவரான தூத்துக்குடியைச் சேர்ந்த டாக்டர் மீனாட்சிசுந்தரம் ஒருதடவை என்னிடம், சார் நீங்கள் ஒரு தடவை தேவிப்பட்டணம் போய்வாருங்கள் அங்கு கடலுக்குள் நவக்கிரக்கோயில் ஒன்றுள் ளது. காலையில் அலைகள் குறைவாக உள்ளபோது நவக்கிர கங்கள் தெளிவாகத் தெரியும். மாலையில் நீரில் மூழ்கிக் காணப் படும் என்று கூறியிருந்தார்" எனவே, தேவிப்பட்டணத்தில் நவக் கிரகக் கோவில் எங்கே உள்ளது என்று விசாரித்துக்கொண்டு கடற்கரைப்பக்கமாகச் சென்றோம். கரையிலிருந்து சுமார் 1 கி. மீ தூரத்தில் ஒன்பது கருங்கற்கள் நவக்கிரக அமைப்பில் கடலினுள் காட்சியளித்தன. விக்கிரகங்களின் பெரும்பகுதி நீரில் மூழ்கியி ருந்தது. நண்பகல் வேளையாதலால் வெய்யிலும் கடுமையாக இருந்தது. காலை வேளையாயின் இடுப்பளவு தண்ணீருக்குள் நடந்து சென்றே தரிசித்துவிட்டு வந்துவிடலாம் என்று கூறினார்கள். சில படகோட்டிகள் எம்மை தமது படகில் அழைத்துச் சென்று வருவதாகக் கூறினர். வெய்யில் காரணமாக கைக்குழந்தையுடன் செல்வதை தவிர்த்து கரையில் நின்றபடியே வணங்கிவிட்டு திரும்பினோம்.

இந்த நவக்கிரக கோவில் பற்றியும் ஒரு கதை உள்ளது. இராமர் தமது பிதுர்களுக்காக தர்ப்பணம் செய்த இடம் இது என்றும், அதற்காக அவர் பயன்படுத்திய கற்களே இந்த நவக்கிரகங்கள் என்றும் சிலர் கூறினர். எப்படியிருப்பினும் கடலுக்குள் திறந்த வெளியில் நவக்கிரகங்களைச் சுட்டி நிற்கும் அந்த அற்புதத்தைக் காண மனதுக்கு மிகவும் நிறைவாக இருந்தது.



தஞ்சைப் பெரிய கோவிலில் அம்மா

## 7. தஞ்சைப் பெரியகோவில்

தஞ்சாவூர் என்றதும் முதலில் நினைவுக்கு வருவது தஞ்சைப் பெரியகோவிலும் அதைக் கட்டுவித்த இராஜராஜ சோழச் சக்கரவர்த்தியும் தான். நாங்கள் தேவிப் பட்டணத்தில் இருந்து பிள்ளையார் பட்டிக்குச் சென்றபோது மணி 4.00 ஆகிவிட்டது. அங்கு பிள்ளையாரை வணங்கிவிட்டு தஞ்சாவூர் சென்றடைந்தபோது இரவு மணி 8.00. மழை தூறிக்கொண்டிருந் தது. கோவில் நடைசாத்தும் நேரம். அவசர அவசரமாக தரிசனத் துக்குச் சென்றோம். பிரமாண்டமான நந்திகேசுவரரை வணங்கி அனுமதி பற்றி மூலவரைத் தரிசிக்கச் சென்றோம். உள்ளே எழுந்தருளியிருந்த லிங்கப்பெருமானைக் கண்டுவணங்கிப் பக்திப் பரவசமடைந்தோம். உள்ளேயுள்ள லிங்கப்பெருமானின் ஆவுடையார் 54 அடி சுற்றளவும், 6 அடி உயரமும், பாணம் 23 ½ அடி சுற்றளவும் உள்ளது. தஞ்சைப் பிரகதீஸ்வர லிங்கத்தைப் போன்று பிரமாண்டமான லிங்கத்தை நான் கண்டதேயில்லை. அப்பெருமான் சந்நிதியில் நின்ற ஒவ்வொரு மனிதருமே மிகமிகச் சிறியவர்களாகத் தோன்றினர். எம்பெருமான் எங்கும் வியாபித் தவராகக் காட்சி கொடுத்துக்கொண்டிருந்தார். கலையழகுமிக்க அத்திருக்கோவிலை பகலில் தங்கி தரிசித்துமகிழும் பாக்கியம் எமக்குக் கிடைக்காது போய்விட்டது. ஆனால், மனிதன் எவ்வளவு சிறியவன் என்ற உண்மையை அந்தப் பெருங்கோவில் உணர்த் திக்கொண்டேயிருக்கிறது.

## 8. நவக்கிரக ஸ்தலங்கள்

ஒருவர் சிறிய குற்றம் அல்லது பெரிய குற்றம் ஒன்றைச் செய்யும்போது நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பெறுகிறார். அத்தண்டனையிலிருந்து விடுபடுவதற்கு அல்லது அதன் கடுமை யைக் குறைப்பதற்கு அவர் உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்து கொள்ளலாம். சிலவேளைகளில் ஜனாதிபதிக்கு கருணை மனு அனுப்பி வைக்கவும் நேரிட்டு விடுகிறது.

அதுபோல, நாம் முற்பிறவியில் செய்த பாவ, புண்ணியங் களை அநுபவிப்பதற்காக இப்பூமியில் மானிடப்பிறவி எடுத்த நாம் எமது பழையவினை அல்லது கர்ம வினைகளைப் போக்கிக் கொள்ளாமல் மேலும் மேலும் வினைகளைச் செய்து பாவமூட் டையைப் பெருப்பித்துக்கொண்டிருக்கிறோம். நாம் செய்யும் வினைகளை அநுபவிப்பதற்காக கஷ்டங்களும் துன்பங்களும் எமது வாழ்வில் ஏற்படுகின்றன. அவை சில வேளைகளில் எம் மால் தாங்கிக்கொள்ள முடியாத அளவிற்கு அதிகமாகியும் விடுகின்றன. இதற்கு நாம் எங்குபோய் 'அப்பீல்' செய்வது? யாரிடம் 'கருணைமனு' கொடுப்பது?

ஜோதிட சாத்திரப்படி ஒருவரின் கர்மவினைக்கேற்ப அவரின் ஜாதகத்தில் நவகோள்கள் அல்லது நவக்கிரகங்கள் அமையப் பெற்றுவிடுகின்றன. ஜாதகத்திலுள்ள இந்த நவக் கிரகங்களே அவரின் வாழ்வின் நல்லகாலம், கஷ்டகாலம் என்ப வற்றை நிர்ணயித்து கர்மவினைகளை அநுபவிக்க வைக்கின்றன. கடவுளை நம்பாதவர்கள்கூட சோதிடத்தை நம்புவதைப் பல

இடங்களில் நான் கண்டிருக்கிறேன். சோதிட சாத்திரரீதியாக ஒரு வருக்கு கஷ்டங்கள் ஏற்படும்போது அக்கஷ்டங்களைக் குறைத் துக்கொள்ள அல்லது அக்கஷ்டங்களைத் தாங்கிக்கொள்வதற் குரிய சக்தியை - மனோதிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் சோதிட நூல்களிலேயே பரிகாரங்களும் கூறப்பட்டுள்ளன. அதில் முதலாவது, சம்பந்தப்பட்ட நவக்கிரகங்களைத் திருப்திப்படுத் தல் அல்லது அவற்றுக்கு பிரீதி செய்தலாகும். அதாவது, நவக்கிர கங்களை முறைப்படி வழிபடுதலாகும். அடுத்த கட்டமாக (கருணைமனு கொடுப்பதுபோல) அந்த நவக்கிரகங்களுக்கு மூலதெய்வங்களை வழிபடுதலாகும்.

நவக்கிரக வழிபாடு பற்றி ஏற்கெனவே நவதிருப்பதி என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளேன். பெரும்பாலான கோவில்களில் நவக்கிரகங்களுக்கு என்று தனியான சிறு கோவில்கள் அமைக் கப்பட்டிருப்பதையும் காணலாம். ஆயினும் நவக்கிரக ஸ்தலங்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் ஒன்பது திருக்கோவில்கள் அமை யப் பெற்றுள்ளன. மேற்படி நவக்கிரக தோஷமுடையவர்கள் முக்கியமாக இத்தலங்களுக்குச் சென்று உரியமுறையில் வழி பட்டு பரிகாரம் தேடிக்கொள்வதையும் காணக்கூடியதாக உள் ளது. நவக்கிரக ஸ்தலங்களின் விபரம் வருமாறு:

1) திருமங்கலக்குடி - சூரியனார் கோவில்
2) திங்களூர் - சந்திரன்
3) ஆலங்குடி - குரு
4) திருநாகேஸ்வரம் - ராகு
5) திருவெண்காடு - புதன்
6) கஞ்சனூர் - சுக்கிரன்
7) கீழப்பெரும்பள்ளம் - கேது
8) திருநள்ளாறு - சனி
9) வைத்தீஸ்வரன்கோவில் - செவ்வாய்

சூரியனார் கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் முதலில் அருகிலுள்ள திருமங்கலக்குடி ஸ்ரீ பிராணநாதேஸ்வரரையும்,

ஸ்ரீமங்களாம்பிகையையும் வழிபட்ட பிறகே சூரியனார் கோவிலுக்குச் சென்று வழிபடவேண்டும் என்பது ஐதீகம். சுவாமி சந்நிதியில் நோய்நீங்கப் பிரார்த்திப்போருக்கு ஞாயிற்றுக்கிழமை உச்சிக்காலப் பூஜையின் பின் வெள்ளெருக்கம் இலையில் தயிரன்னம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. அம்பாள் சந்நிதியில் ஸ்ரீ மங்களாம்பிகையின் திருக்கரங்களில் இருந்து மாங்கல்ய சரடு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

திருமங்கலக்குடிக்கு சற்று கிழக்கே சிவசூரியனார் கோவில் தனியாக அமைந்துள்ளது. இங்கு சூரியனை மூலவராகக் கொண்டு மற்ற எட்டுக் கிரகங்களுக்கும் தனித்தனித் திருக் கோவில்கள் உள்ளன. இங்கு நவக்கிரகங்களும் எவ்வித ஆயுதமோ வாகனமோ இன்றி அநுக்கிரக மூர்த்திகளாக காட்சிய ளிப்பது தனிச்சிறப்பாகும்.

திங்களூர் - சந்திரனுக்குரிய தலமாக விளங்கும் இவ்வா லயத்தில் பங்குனிஉத்திரத்தன்று காலை 6.00 மணிக்கு சூரிய ஒளி சிவலிங்கத்தின்மேல் பிரவேசிப்பதையும் மறுதினம் (பௌர்ணமி) பிரதமையில் மாலை 6.30 மணிக்கு சந்திர ஒளி சிவலிங்கத்தின்மேல் பிரவேசிப்பதையும் காணலாம். சந்திர பகவானுக்கு இவ்வாலயத்தில் தனிச் சந்நிதி உள்ளது. ராகுபக வானுக்குரிய சிறப்புத்தலம் திருநாகேஸ்வரமாகும். இங்கு சுவாமி அம்பாள் சந்நிதியுடன் ராகுவுக்கெனத் தனிச் சந்நிதி உள்ளது. தினமும் ராகுகாலத்தில் ஸ்ரீராகு பகவானுக்கு பால்அபிஷேகம் நடைபெறும். அப்போது அவர் திருமேனியில்வரும் பால் நீல நிறமாகத் தெரிவதைக் காணலாம்.

தஞ்சாவூர் செல்பவர்கள் நவக்கிரகத் தலங்களையும் தரிசித்துப்பலன்பெறலாம். நான் இத்தொடரை எழுதுவதற்குக் காரணம் எனது அநுபவங்கள் சிலவற்றை பகிர்ந்துகொள் வதற்கே. ஒவ்வொரு கோவிலிலும் அத்தலவரலாற்றைக் குறிக்கும் சிறு புத்தகங்கள் விலைக்குக் கிடைக்கும் அவற்றை வாங்கி வைத்துக் கொண்டால் பின்னர் சாவகாசமாகப் படித்து இன்புற லாம். இத்தொடரில் தலவரலாறுகளை நான் அதிகம் எழுத

விரும்பவில்லை. அது வாசகருக்கு அலுப்பை ஏற்படுத்தவும் கூடும். அது மட்டுமன்றி, மேற்படி கோவில்களுக்குச் செல்வதற்கு வரைபடங்களும் உண்டு. அவற்றை இங்கு குறிப்பிடுவதும் அவசியமற்றதாகவே கருதுகிறேன். ஏனென்றால், இங்கிருந்து தமிழ்நாட்டிற்குப் புதிதாகச் செல்பவர்கள் பலவழிகளில் தமது யாத்திரைகளை மேற்கொள்ள நேரிடலாம். அப்படிப்பட்ட சந்தர்ப் பத்தில் நான் மூன்றாண்டுகளுக்கு மேல் அங்கு தங்கியிருந்து வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு வழிகளூடாக மேற்கொண்ட யாத்திரைப் பாதைகளைக் கூறப்போனால் குழப்பத்தை ஏற்ப டுத்தக்கூடும். எனவே, எந்த எந்த இடத்தில் எவ்வாலயங் களுக்குச் சென்று தரிசித்தேன். அங்கு குறிப்பிடக்கூடிய சில சிறப்புக்கள் நிகழ்வுகளை மட்டும் எடுத்துக் கூறுகிறேன். உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது தமிழ்நாட்டில் நீங்கள் விரும்பிய கோவில்களைத் தரிசிக்கும்போது எனது அநுபவங்கள் உங்களுக்கு உதவியாக அமையக்கூடும் அல்லவா?

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல.**

**குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே**
**உடம்போடு உயிரிடை நட்பு.**

**- வள்ளுவம்**

## 9. திருக்கடவூர் அபிராமி அம்மன் ஆலயம்

எனது குழந்தைக்கு அபிராமி என்று பெயர் வைத்தது ஒரு தற்செயலான நிகழ்வாகும். ஆனால், அவ்விதம் பெயரிட்டதன் பின்னர் எப்படியும் ஒரு தடவை திருக்கடவூர் சென்று தரிசித்து வரவேண்டும் என்று ஆவலுடையவர்களாக இருந்தோம். நாம் தஞ்சாவூர் சென்றபோது இது கைகூடியது.

தஞ்சைப் பெருவுடையாரை தரிசனம் பண்ணியதற்கு மறுநாள் காலையில் ஆறுபடைவீடுகளில் ஒன்றான சுவாமிமலை சென்று ஷண்முகப் பெருமானைத் தரிசித்தபின்னர் திருநாகேசுவரம், ஒப்பிலியப்பன் கோவில், சூரியனார் கோவில் என்பவற்றுக்குச்சென்று தரிசித்து விட்டு திருக்கடவூருக்குச் சென்றோம். அப்போது மணி பி.பகல் 2.00. சாயங்காலப் பூஜைக்கு நிறைய நேரம் இருந்தது. கோவில் மண்டபத்தில் சாவகாசமாக உட்கார்ந்து கோவில் வரலாறு பற்றி விசாரித்து அறிந்துகொண்டோம்.

அம்பாள் அருள்பாலிக்கும் தலங்களுள் திருக்கடவூர் சிறப்பு வாய்ந்தது. அபிராமிப்பட்டருக்காக அமாவாசையன்று பௌர்ணமியைத் தோற்றுவித்த அருள்த்தாயின் திருக்கோவில் இது. அது மட்டுமல்ல, மார்க்கண்டேயருக்காக யமனை தமது திருப்பாதத்தால் உதைத்ததலமும் இதுவேயாகும். இங்கு இறைவர் அமிர்த கடேஸ்வரர் என அழைக்கப்படுகிறார். அர்த்தநாரீசுவரரான இறைவனின் இடதுபுறம் அம்பாளுக்குரியது. யமனை இறைவன் தனது இடது காலால் உதைத்ததாகக் கூறப்படுகிறது. எனவே, இறைவர் தமது சக்தியினூடாகவே யமனை உதைத்து மார்க்கண்டேயருக்கு தீர்க்காயுளை வழங்கியருளினார்.

எனவே, திருக்கடவூர் சென்று வணங்கினால் தீர்க்காயுள் உண்டாகும். ஷஷ்டி யப்த பூர்த்தி எனப்படும் 60 ஆம் வயது நிறைவுறும் தம்பதிகள் இவ்வாலயத்துக்கு வந்து '60ஆம் கலியாணம்' செய்து கொள்வது சிறப்பான விடயமாகக் காணப்படுகிறது. நாங்கள் சென்றபோதுகூட வெளியூரில் இருந்து வந்து 60 ஆம் கலியாணம் முடித்துவிட்டு ஒரு கோஷ்டி ஊர்திரும்பிக்கொண்டிருந்ததைக் கண்டோம்.

60ஆம் கலியாணம் என்பது கணவனுக்கு 60 வயது நிறைவுற்றதும் நடைபெறும் திருமணச்சடங்காகும். இதில் கணவன் மனைவிக்கு இரண்டாவது தாலி கட்டுவார். பிள்ளைகள், பேரப்பிள்ளைகளால் ஏற்பாடு செய்து நடாத்தப்படும் இத்திருமணம் இந்து கலாசாரத்துடன் சம்பந்தப்பட்டது. 60 வயது நிரம்பிய பெற்றோருக்கு "எல்லாவற்றுக்கும் நாம் இருக்கிறோம் கவலைப்படவேண்டாம்" என்று உளவியல் ரீதியான ஆதரவு, அன்பு, தென்பு என்பவற்றை வழங்கும் ஒரு நிகழ்வாக இது அமைகிறது.

முதல் திருமணம் குழந்தைப்பேறு, காமம் போன்றவற்றை ஒரு விதத்தில் முக்கிய நோக்கமாகக் கொண்டு நடைபெறுகிறது என்று கூறினால் இந்த இரண்டாவது திருமணம் ஆன்மீகத்தை நோக்கியதாக முதியவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இல்லறத்திலிருந்து துறவறத்தை நோக்கிச் செல்லும் ஒரு வழிகாட்டியாக அமைகிறது என்றுங் கூறலாம். இலங்கையில் இவ்வித 60ஆம் கலியாணம் விரல் விட்டு எண்ணக்கூடியதாக சில இடங்களில் மட்டுமே நடைபெறுகிறது.

இந்தியாவில் பரவலாக நடைபெறுவதைக் காணமுடிகிறது. திருக்கடவூர் திருத்தலத்தில் 60ஆம் கலியாணம் செய்து கொள்வது தம்பதியினரின் ஆயுளை நீடிக்கச் செய்யும் என்று நம்பப்படுகிறது. இவ்விதம் 60ஆம் கலியாணம் செய்வதற்குரிய வசதிகள் அனைத்தும் அங்குள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

திருக்கடவூர் தரிசனத்துக்குப் பிறகு நாம் திருஞான சம்பந்தர் அவதரித்த சீர்காழிக்கும் சிதம்பரத்துக்கும் சென்று தரிசனம் செய்துவிட்டு திருச்சிக்குப் புறப்பட்டோம்.

திருச்சியில் உச்சிப்பிள்ளையாரைத் தரிசித்துவிட்டு ஸ்ரீரங்கம் சென்றோம். தென்திசை நோக்கிப் (இலங்கையை நோக்கி) பள்ளிகொண்டிருந்த பெருமானைத் தரிசனம் பண்ணி விட்டு வெளியே வந்தோம். திருவரங்கத்தில் தெற்குக் கோபுரம் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டதால்தான் இலங்கையில் பிரச்சினைகள் தோன்றி மக்கள் பல்லாயிரக்கணக்கில் மடிய நேரிட்டது என்று ஏதோ ஒரு புத்தகத்தில் படித்ததாக ஞாபகம். அதாவது "வடக்குக் கோபுரம் தெற்கு மாளிகையை அழித்து விடும்' என்பது சாத்திரம் என்று கேள்விப்பட்டிருந்தேன். இது தொடர்பாக இந்தியாவில் நான் இருந்தபோது நண்பர் D.K. சௌந்தரராஜன் அவர்களிடம் கூறினேன். அதற்கு அவர் தானும் இது பற்றி கேள்விப்பட்டதாகவும், ஆனால் மேற்படி கோபுரத் துக்கும், இலங்கைப் பிரச்சினைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று பெரியவர்கள் சிலர் கூறியதாகவும் என்னிடம் சொன்னார்.

கடலுக்கு அப்பால் கட்டப்பட்ட கோபுரத்தால் கடலுக்கு இப்பாலுள்ள இலங்கையில் பிரச்சினைகள் தோன்ற மாட்டாது என்பதே அறிஞர் கருத்தாகும். அது மட்டுமன்றி தென்திசை நோக்கி தனது அருட்பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கும் அரங்கப்பெருமானை சரணடைந்துவிட்டால் எந்தவித துன்பமும் வந்துவிட மாட்டாது அல்லவா?

ஸ்ரீரங்கத்திலிருந்து சமயபுரம் மாரியம்மனைத் தரிசிக்கச் சென்றோம். வேண்டும் வரத்தை வேண்டும்போதே தந்தருளும் அன்னை அவள். நான் இந்த தலயாத்திரை புறப்பட்ட வேளை யில் எனக்குச் சில கஷ்டங்கள் இருந்தன. அப்போது அன்பர் சுப்பையா அவர்கள், "சார் உங்கள் பிரச்சினையை சமயபுரம் மாரியம்பாளிடம் விட்டுவிடுங்கள். கவலை பறந்தோடிவிடும்" என்று கூறி அனுப்பினார். நானும் அம்பாள் சந்நிதியில் எனது கஷ்டங்களை முறையிட்டுவிட்டு வந்தேன். மிக விரைவில் உண் மையாகவே, எனது பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்ந்துவிட்டன.

சமயபுரம் செல்பவர்கள் அருகிலுள்ள திருவானைக்கா திருத்தலத்துக்கும் சென்றுவரலாம்.

## 10. மதுரை மீனாட்சியம்மன் கோவில்

மாசியப்பிட்டி அங்கணம்மைக் கடவை மீனாட்சி அம்மன் ஆலயம் எமது பரம்பரைக் கோவில். பலதலைமுறைகளாக எமது முன்னோர் பூஜை பண்ணிவந்த திருத்தலம். மீனாட்சி அம்மன் எமது குலதெய்வம். எனவே, இந்தியாவில் இருந்த போது மதுரை மீனாட்சியம்மனைத் தரிசிப்பதில் நாம் பேராவல் கொண்டிருந்தோம் என்பது சொல்லாமலே விளங்கும்.

மீனாட்சியம்மன் கோவிலுக்கு நாம் தெற்குக் கோபுரவாசல் வழியாகப் பிரவேசித்து முதலில் விநாயகப்பெருமானை வணங்கி னோம். அங்கு ஓரிடத்தில் பாண்டிய மன்னனின் வெப்புநோய் தீர்ப்பதற்காக திருஞானசம்பந்தர் பயன்படுத்திய - மடப்பள்ளியி லிருந்து கொண்டுவரப்பட்ட சாம்பல் - திருநீறு வைக்கப்பட் டிருந்தது. தீராத நோய்களையும் தீர்க்கும் அற்புத பஸ்பம் அல்லவா அது!

அம்பாள் சந்நிதியில் உள்ளம் கசிய பிரார்த்தித்துவிட்டு எம்பெருமான் சந்நிதிக்குச் சென்று வணங்கினோம். விஸ்வநாத நாயக்கரால் கட்டப்பட்ட ஆயிரங்கால் மண்டபம் ஓர் அற்புத கலைக்களஞ்சியமாக விளங்குகிறது. சப்த ஸ்வரங்களையும் ஒலிக்கும் சங்கீதத் தூண்களும் அங்கு உள. கோவிலினுள் காணவேண்டிய இன்னொரு முக்கியமான இடம் பொற்றாமரை வாவியாகும். இறைவனுடன் வாதாடி நெற்றிக்கண்ணின் வெம்மை தாங்கமுடியாது நக்கீரர் மறைந்த இடம் இந்தப் பொற்றா

மரைக்குளம் ஆகும். அது மட்டுமன்றி சங்கப்பலகை மிதந்த இடமும் இத்திருக்குளத்திலாகும். தகுதியற்ற நூல்களை சங்கப் பலகையில் வைத்தால் அது அந்நூலை நீருள் சரித்து மூழ் கடித்துவிடும் என்பர்.

தமிழ்நாட்டில் நான் இருந்த காலத்தில் சில குடும்பஸ்தர்கள் நீர் என்ன மதுரையா? சிதம்பரமா? என்று ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக்கொள்வதைக் கேட்டிருக்கிறேன். இது பற்றி நண்பர் D.K. சௌந்தரராஜனிடம் கேட்டேன். அதற்கு அவர் சொன்ன விளக்கம்:- சிவபெருமான் மதுரை மீனாட்சியம்மனைத் திருக்கல்யாணம் செய்த பின்னர் ஆட்சிப்பொறுப்பு, வீட்டுப் பொறுப்பு எல்லாவற்றையும் அம்பாளிடம் கொடுத்துவிட்டு 'சிவனே' என்று உட்கார்ந்து விட்டாராம். அதாவது மதுரையில் நடப்பது பெண்ணரசு. எனவே, ஒரு குடும்பத்தில் கணவன் தனது சம்பளம் எல்லா வற்றையும் மனைவியிடம் கொடுத்துவிட்டு, வீட்டுப்பொறுப்பு எல்லாவற்றையும் அவளிடம் விட்டுவிட்டு நிம் மதியாக (?) இருந்தால் அக்குடும்பம் மதுரை (அதாவது பெண் ணரசாம்), அதுக்கு மாறாக குடும்பப் பொறுப்புகள், அதிகாரம் எல்லாவற்றையும் ஆண் சுமந்தால் அது சிதம்பரமாம். வாசகரே உங்கள் வீடு எப்படி? மதுரையா, சிதம்பரமா?

மதுரை செல்பவர்கள் அருகிலுள்ள ஆறுபடைவீடுகளான திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை என்பவற்றையும் கள்ள ழகர் கோவிலையும் தரிசித்துக்கொண்டு திரும்பலாம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

– வள்ளுவம்

## 11. கேரளத் திருத்தலங்கள்

இந்தியாவில் நாம் தங்கியிருந்த காலத்தில் கேரளத் தலை நகர் திருவனந்தபுரத்துக்குப் பலதடவை சென்று வரச் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் கொழும்பிலிருந்து விமானமூலம் இந்தியா வுக்குச் செல்லும்போதும் திருவனந்தபுரம் விமான நிலையத்துக் குச் சென்று, அங்கிருந்து நாகர்கோவிலூடாக பாளையங் கோட்டைக்குச் செல்வது வழக்கம்.

1997 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கேரளாவில் நடைபெற்ற தேசிய சித்தமருத்துவ மாநாட்டுக்கு எமது பட்டமேற்படிப்புத் துறை நண்பர்களுடன் சென்றிருக்கிறோம். அம்மாநாட்டில் ஈழத் துச்சித்தமருத்துவம் பற்றிப்பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத் தது. ஆயினும், இரண்டுநாள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு பாளையங்கோட்டை திரும்பிவிட்டோம். ஊர் சுற்றிப் பார்க்க முடிய வில்லை.

அடுத்த தடவை 1999 பெப்ரவரியில் பஞ்சகர்ம சிகிச்சை பற்றி அறிந்து கொள்வதற்காகச் சென்றபோது மூன்று தினங் கள்வரை தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது நாம் பார்த்த விட யங்கள் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தின! ஏன்?

கேரள மக்களின் பழக்கவழக்கங்களிற் பல எமது யாழ்ப் பாணத் தமிழரின் பழக்கவழக்கங்களை ஒத்துக் காணப்படுகின் றன. நாம் பாளையங்கோட்டையில் வசிக்க ஆரம்பித்த ஆரம்ப

நாட்களில் கடைகளுக்குச் சாமான் வாங்கச் சென்றால் கடைக் காரர் நாம் பேசுவதைப் பார்த்து, "சார் மலையாளமா? என்று கேட்பார்கள். நாங்கள் கதைக்கும்முறை, எமது தமிழ் மலையாளிகள் பேசுவது போல அவர்களுக்குப்பட்டிருக்கவேண்டும். கேரளாவில் தனித்தனி வீடுகளும், காணிகளும் எமக்கு யாழ்ப் பாணத்தையே நினைவூட்டின.

தமிழ் நாட்டில் அபூர்வமாகக் காணப்படும் பிட்டு கேரளா ஹோட்டல்களில் தாராளமாகக் கிடைக்கும். அதுமட்டுமன்றி தமிழ்நாட்டு ஹோட்டல்களில் மதிய உணவாக பொன்னியரிசிச் சோறு, சாம்பார், ரசம், கூட்டுவகை என்று உணவுமுறை யாழ்ப்பாண உணவுமுறையிலிருந்து மாறுபட்டுக் காணப்படும். ஆனால் கேரளாவில் எமது யாழ்ப்பாணத்து மதிய உணவைப் போலவே புழுங்கலரிசிச் சோறு, பருப்பு, கறிவகைகள், குழம்பு, பொரியல் என்று ஒற்றுமையைக் காண முடிந்தது.

மலையாள பாஷையும், தமிழும், கிரந்தமும் கலந்த மணிப் பிரவாள நடையில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண மன்னர்களின் காலத்தில் சேரர்கள் (கேரளர்கள்) இங்கு வந்துள்ளார்கள். எனவே, தமிழ்நாட்டினருடன் எமது தொடர்புகளை ஆராயும் நாம் கேரளாவுடனான தொடர்புகள் பற்றியும் விரிவாக ஆராய்வது நல்லது. கோவளம், திக்கம் போன்ற ஊர் பெயர்கள் இங்கும் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கேரளக் கோவில் வழிபாட்டு முறைகளும் எமது யாழ்ப் பாணக் கோவில் வழிபாட்டு முறைகளை ஒத்துக் காணப் படுகின்றன. முக்கியமாக ஆண்கள் மேற்சட்டையின்றி, வேட்டி யுடுத்திச் சென்றால்மட்டுமே அங்குள்ள கோவில்களினுட் செல்ல முடியும் ( வேட்டியை வாடகைக்கு வழங்கும் நிலையங்களும் கேரளக்கோவில் வாசலில் காணலாம்) தமிழ் நாட்டில் திருச் செந்தூர் போன்ற சில ஆலயங்களில் மட்டும் தற்போது ஆண்கள் மேற்சட்டையின்றி உட்செல்லவேண்டும் என்ற நடைமுறை யுள்ளது. அவ்விதமே பெண்கள் சேலை அல்லது முழுப் பாவாடை, சட்டை அணிந்துதான் செல்லவேண்டும்.




கன்னியாகுமரியில் தரிசனம் செய்யும் அம்மா

நாம் இரண்டாவது தடவை கேரளாவில் தங்கியிருந்தபோது பத்மநாபசுவாமி கோவில், பகவதி அம்மன் கோவில் என்பவற்றுக்குச் சென்று தரிசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு ஓராண்டுக்குப் பிறகு குருவாயூர், சபரிமலை என்பவற்றுக்குச் சென்று தரிசிக்க வாய்ப்புக் கிடைத்தது.)

## 11.1 பத்மநாபசுவாமி கோவில்

கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்தில் பஸ் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில். இக்கோவில் கலியுகத் தொடக்க நாளன்று அமைக்கப்பட்டதாகக் கூறுவர். மூலஸ்தானத்தில் அனந்த சயனத்தில் பள்ளி கொண்டுள்ள பெருமாளைத் தரிசிக்க இரண்டு கண்கள் போதா. பெருமாளின் சிரசு, கழுத்து, மார்புப்பகுதியை முதலிலும், வயிறு, நாபிக்கமலத்தை அடுத்தும், திருப்பாதங்களை இறுதியிலுமாகத் தரிசித்து வெளிவரலாம்.

கோவிலுக்குள் சென்றுவிட்டால் முற்றிலும் புதிய உலகம் தான். நகரத்தின் சந்தடியிலிருந்து விலகின சூழல். கேரள மன்னர்களின் கைங்கரியத்தால் சிறப்புற்று விளங்குகிறது இத் திருக்கோவில். சுத்தம், சுகாதாரத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக உள்ளது. தினமும் காலையில் கேரள அரச குடும்பத்தினரின் வாரிசுக்கள் வழிபட்ட பின்னரே ஏனையோர் வழிபட அனுமதிக்கப்படுகின்றனர்.

## ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவில்


சபரிமலை ஆண் பக்தர்களுக்கு எவ்விதம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறதோ அதுபோல ஆற்றுக்கால் பகவதி அம்மன் கோவில் பெண் பக்தர்களுக்கு முக்கிய வழிபாட்டுத் தலமாக விளங்குகிறது. பெண்கள் பகவதி அம்மனை வேண்டி விரதமிருந்து, பின்னர் கோவிலுக்குச் சென்று பொங்கலிட்டு வழிபட்டு விரதத்தை முடித்துக் கொள்வர். (ஆண்களும் இக் கோவிலுக்குச் சென்று வழிபடலாம்)

இக்கோவில் கேரளத் தலைநகர் திருவனந்தபுரத்திலிருந்து ஆற்றுக்கால் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. பாண்டிய மன்னனிடம் வாதிட்ட பின் கண்ணகி இவ்விடம் வந்து, பின்னர் இங்கிருந்து கொடுங்கலூர் சென்றதாகக் கூறப்படுகிறது. இக்கோவிலில் நடைபெறும் பொங்கல்விழா மிகவும் பிரசித்தி பெற்றது. ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தில் மகநட்சத்தி ரத்தில் லட்சக் கணக்கான மக்கள் (பெண்கள்) இங்கு வந்து பொங்கல் பொங்கி வழிபடுவர். இப்பொங்கல் விழாவில் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உறங்குது போலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு.**

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு.**

**- வள்ளுவம்**



பத்மநாயசுவாமி கோவில் வாசல்

## 12. சென்னைத் திருக்கோவில்கள் சில

### 1. மயிலை காபலீஸ்வரர் கோவில்

மயிலாப்பூரில் உள்ளது. ஜனசந்தடிமிக்க சென்னையில் அமைதியான ஒரு கோவில். சிவனால் சாபம் பெற்ற உமா தேவி யார் இங்கு மயில் உருவில் வழிபட்டு சிவனை அடைந்ததால் இத்தலத்துக்கு திருமயிலை / மயிலாப்பூர் என்று பெயர். அம்பாள் பெயர் கற்பகாம்பாள், இறைவன் கபாலீஸ்வரர், புன்னை வனநாதர். பூம்பாவையை (எலும்பை) சம்பந்தர் பெண்ணாக்கி யதும் இங்குதான். எனவே இங்கு சம்பந்தருக்கும் தனிக்கோவில் உள்ளது. இந்தியாவில் இங்கு கோவில்அமைப்பு சற்று வித்தியாசம். மூலஸ்தானத்துக்கு முன்மண்டபம்வரை சென்று ஸ்வாமி தரிசனம் பண்ணலாம்.

### 2. அஷ்டலட்சுமி கோவில்

பெசண்ட் நகரில் உள்ளது. இக்கோவிலையண்டி எலியட்பீச் உள்ளது. சமீபகாலத்தில் கட்டப்பட்ட அழகிய கோவில் இது. மூலஸ்தானத்தில் ஆரம்பித்து நான்கு திசைக்கும் ஒன்றாக அஷ்ட லட்சுமிகளையும் தரிசிக்கலாம். கீழே முதல் சுற்றுமுடிந்ததும் படிகளில் ஏறி மேலே ஏனைய லட்சுமிகளையும் தரிசிக்கலாம். கோவில் சுற்றுப் பிரகாரத்தில் ஆஞ்சநேயர், பிள்ளையார், தன் வந்திரி (இவர்தான் பாற்கடலில் இருந்து ஆயுர்வேத வைத்தி

யத்தைக் கொண்டுவந்தவர். விஷ்ணுவின் அவதாரம் என்பர்) முதலியோரையும் தரிசிக்கலாம். பழனி என்றால் அது தென் பழனியைக் குறிக்கும். ஆனால் வடபழனியாண்டவர் கோவில் மெட்ராசில் உள்ளது. மிகவும் அழகிய கோவில். ஆனால் இத்தல வரலாறு பற்றி அதிக செய்திகள் சேகரிக்க என்னால் முடியவில்லை.

### 3. குன்றத்தூர் குமரன் கோவில்

சிறு மலையில் உள்ளது. இங்கு மூலஸ்தானத்தில் வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமான் காட்சிதருகிறார். எனினும் ஒருபக்கம் நின்று வழிபடும்போது முருகனும் வள்ளி யும், இன்னொரு பக்கம் நின்று வழிபடும்போது முருகனும் தெய்வானையும்தான் காட்சி தருவர். ஒரே நேரத்தில் வள்ளி, தெய்வானையை தரிசிக்க முடியாது. அவ்விதம் மூலஸ்தானம் அமைக்கப்பட்டுள்ளது. இது இக்கோவிலுக்குரிய சிறப்பாகும்.

### 4. மாங்காடு காமாட்சி அம்மன் கோவில்

மாங்காடு காமாட்சி அம்மன் கோவிலுக்கு குன்றத்தூர்குமரன் கோவிலில் இருந்து அரை மணியில் போகலாம். இதுவும் ஒரு பெரிய கோவில். அம்பாள் மாமரத்தின் கீழ் தவம் செய்து சிவனை மணந்ததாக ஸ்தல வரலாறு கூறும். செவ்வாய், வெள்ளி, ஞாயிறு அம்பாளுக்குரிய தினங்கள். இத்தினங்களில் இங்கு கூட்டம் அலைமோதும். ஒன்பது ஞாயிற்றுக்கிழமைகளுக்கு அம்பாளுக்கு எலுமிச்சங்காய் மாலை சாத்தி வழிபட்டால் நினைத்த காரியம் சித்தியாகும் என்பர். அம்மனுக்குரிய தினம் என்பதால்தான் செவ் வாய், வெள்ளி கிழமைகளில் மா முதலின வறுக்கக் கூடாது என்பர். மாங்காட்டிலிருந்து அரை மணியில் திருவேற்காடு போக லாம். இங்கு கருமாரியம்மன் கோவில் உள்ளது. திருவேற்காடு திரு + வேல் (வேலமரம்) + காடு இங்கு நிறைய வெள்வேலமரம் உள்ளது. இவ்வம்பாளை வழிபட்டால் திருமணம் விரைவில் ஆகுமாம்.

# 13. கன்னியாகுமரி, சுசீந்திரம்

கன்னியாகுமரி இந்தியாவின் தென்முனை (Land's end). இவ்விடத்தில் இந்துசமுத்திரம் அராபிக்கடல், வங்காள விரிகுடா ஆகிய மூன்றும் சங்கமிக்கின்றன. கன்னியாகுமாரியில் சூரிய உதயம் அழகான காட்சி. கடலிலிருந்து சூரியன் எழுவதுபோல இருக்கும். நாங்கள் பாளையங்கோட்டையிலிருந்து அதிகாலை நான்கு மணிக்கு புறப்பட்டு 5.45க்கு கன்னியாகுமரி சென்று விட்டோம். பல்லாயிரக்கணக்கானவர்கள் சூரிய உதயம் பார்க்க வந்திருந்தனர். எனினும் மேகமூட்டம் மிகுதியாக இருந்ததால் ஏழு மணிவரை சூரியன் தெரியவில்லை. கன்னியாகுமரி அம்மன் கிழக்கே கடலைப்பார்த்தவண்ணம் அமர்ந்துள்ளார். அம்பாளின் மூக்குத்தி ஜ்வாலிப்பதைப் பார்க்க மிகவும் பரவசமாக இருக்கும். அதிகாலை தரிசனம் மிகவும் இதமாக இருந்தது. அப்படி ஒரு மூக்குத்தி ஒளியை நாம் இதுவரை காணவில்லை. அம்பாளின் மூக்குத்தி ஒளி கடலில் வெகுதூரம் வரை தெரியுமாம். அதனால் கடலில் வரும் கப்பல்கள் இந்த வெளிச்சத்தைப் பார்த்துக் கரை நோக்கி வருமாம். அவ்விதம்வரும் கப்பல்களிற்பல கரையோரத் திலுள்ள பெரும்பாறைகளில் மோதுண்டுள்ள சம்பவங்களும் உண்டாம். எனவே, தற்போது அம்பாளின் கிழக்குப்பக்க பிரதான வாசலை மூடியே வைத்துள்ளார்கள். கோவிலின் கிழக்குக் கடலில் விவேகானந்தர் நீந்திச் சென்று தியானம் செய்த பாறை யில் விவேகானந்தர் நினைவாலயம் கட்டியுள்ளார்கள். அதற்குச் செல்ல படகு சேவையுண்டு. நாங்கள் அங்கும் சென்று பார்த்

தோம். கொந்தளிக்கும் கடலில் மனதுக்கு அமைதி தேடி தியானம் செய்யும் மண்டபம் அமைந்துள்ளது. அங்குள்ள தியான மண்டபத்தில் அமர்ந்திருந்தாலே வெளியுலக நினைவு வராது. ஆனால், கரையில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தில் பார்க்கக் கூடிய தூரத்தில் அமைந்துள்ள அந்த நினைவுஇல்லத்துக்குப் படகில் செல்வது சற்று பயம்தான். ஆயினும் தினமும் பல்லா யிரக்கணக்கானவர்கள் சென்றுவந்தவண்ணமுள்ளனர். விவே கானந்தர் பாறைக்கு அருகில் இன்னொரு பாறையில் திருவள்ளு வரின் பிரம்மாண்டமான சிலை அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (தற்போது நிறைவடைந்து விட்டது) முக்கடலும் கூடும் இடம் என்பதால் இங்குள்ள கடற்கரை மண்ணும் விசேடம் பெறுகிறது. குருணல்கல் மணல், கருமணல், நரை நிறமண் என்று வித்தியாசம். அவற்றை சிறு சிறு "பக்கெட்" டில் விற்கிறார்கள் நாங்கள் 2 பக்கெட் 6/=ற்கு வாங்கினோம். இது பற்றி ஒரு கதையும் உண்டு. பாணாசுரன் என்னும் அரக்கனால் தேவர் முதலானோர் மிகுதுன்பப்பட்டனராம். அவ்வசுரன் ஒரு கன்னிப் பெண்ணால் தான் கொல்லப்பட வேண்டும் என்று வரம் வாங்கியிருந்தானாம். எனவே, அவ்வசுரனைக் கொன்று அறந் தழைத்தோங்கச் செய்வதற்காக பராசக்தி கன்னியாக - கன்னியா குமரியாக இங்கு வந்து தவம் மேற்கொண்டதாகவும், இக் கன்னியாகுமரியின் மீது அன்புகொண்ட சுசீந்திரத்தில் இருந்த சிவபெருமான் அவரைத் திருமணம் செய்ய விரும்பினாராம். அதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நள்ளிரவில், ஒரு நற்பொழுதில் அத்திருமணம் நிகழ வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதாம். இத்திருமணம் நடந்தால் கன்னி யால்தான் பாணாசுரன் கொல்லப்பட வேண்டும் என்றிருந்ததால் பராசக்தியின் இத்திருமணத்தை நடக்க விடாமல் செய்யக் கருதி நாரதர் சுசீந்திரத்தில் இருந்து கன்னியாகுமரி வரும் வழியில் வழுக்கம் பாறை என்னும் இடத்தில் ஒரு சேவல் உருக்கொண்டு, உரக்கக் கூவி, பொழுது புலர்ந்தது என்று தவறாக புரிந்து கொள்ளச் செய்தாராம். ஆகவே, திருமணத்திற்குரிய நற்பொழுது கழிந்துவிட்டது என்று சிவபெருமானும் வருத்தத்துடன் சுசீந்திரம் திரும்பினாராம். தேவியும் அதன்பின் என்றும் கன்னியாக குமரி

யில் இருப்பதாக முடிவு செய்துகொண்டாராம். திருமணத்திற்காக தயாரிக்கப்பட்ட விதவிதமான உணவுவகைகள் யாவும் மணலாக மாறினவாம். அதனால்தான் குமரிக் கடல்துறையில் சோற்றுப் பருக்கை போன்ற வெண்மணலும், வேறுவகையான மணல்களும் மிகுதியாகக் காணப்படுகின்றன என்பர். கன்னியாகுமரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் காந்தி நினைவு மண்டபம் உள்ளது. அங்கு காந்தியின் அஸ்தி குமரிக்கடலில் கரைப்பதற்காக கொண்டுவந்து வைத்த இடத்தில் காந்தி நினைவு நாளன்று சூரிய வெளிச்சம்படும்படி அமைத்துள்ளனர். மற்றது விவேகானந்தர் பாறையில் அம்பாளின் பாதம் ஒன்று காணப்படுகிறது. அதற்கு சிறுகோவில் கட்டி வைத்துள்ளனர். தத்ரூபமாக உள்ளது.

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் வரும்வழியில் அரை மணி பயணத்தில் சுசீந்திரம் கோவில் உள்ளது. இங்கு அகலியையின் சாபம் பெற்ற இந்திரன் வழிபட்டதாக வரலாறு. தற்போதுகூட இந்திரன் இங்கு இரவில் வந்து வழிபடுவதாகக் கூறுவர். எனவே, மாலைபூசை செய்த பூசகர் இங்கு காலை பூசை செய்வதில்லை. (2 பூசகர் உண்டு) அதுமட்டுமன்றி (இரவில் இந்திரன் வந்து பூசைசெய்து வழிபடுவதால்) அகங் கண்டது புறங்கூறேன் என்ற உறுதி மொழியுடனே பூசகர் நடை திறப்பாராம். சுசீந்திரத்துக்கு இன்னொரு வரலாறும் உண்டு. அதாவது அத்திரிமுனிவரின் மனைவி அனசூயாவின் கற்பைச் சோதிக்க வந்த மும்மூர்த்திகளை அவ்வம்மை குழந்தைகளாக்கி தொட்டிலிலிட்டு விட்டாராம். பின்னர் அவர்கள் தேவியரின் வேண்டுகோட்கிணங்கி அவர்களைத் திருப்பிக் கொடுத்தாராம் (சுசீந்திரம் இந்திரன் வழிபட்டது)

அடுத்து நாகர்கோவிலில் நாகராஜா கோவிலுக்குப் போனோம். நாகதோஷம் உள்ளவர்கள் இங்கு கட்டாயம் வழிபடவேண்டும் என்பர். பல நூற்றுக்கணக்கான நாகதம்பிரான் உருவங்கள் இங்குள்ளன. சுசீந்திரத்தில் இன்னொரு விசேடம் நவக்கிரகங்கள் கோவில் கூரையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. எனவே மேல்நோக்கி நிமிர்ந்து தான் வழிபட வேண்டும்.

# நன்றி

எமது அன்புத் தாயாரின் மறைவு எம்மை மிகவும் அதிர்ச் சிக்கும், ஆறாத்துயரத்துக்கும் ஆளாக்கியது.

பிறந்தவர்கள் யாவரும் ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும், என்றாலும் இழப்பைத் தாங்கிக்கொள்வது அதுவும் அன்னையின் இழப்பைத் தாங்கிக்கொள்வது இயலக்கூடிய காரியமல்ல.

தந்தைப் பாசம் என்றும் தாயன்பு என்றும் குறிப்பிடுவது வழக்கம். பாசத்திலும்விட அன்பு பாரபட்சமற்றது. பிள்ளைக ளிடத்தில் பாசம் காட்டுவதில் பாரபட்சம் இருக்கக்கூடும்; ஆனால் அன்பு காட்டுவதில் பாரபட்சம் கிடையாது.

எனவேதான் தாய்க்கு, தாயன்புக்கு நிகரில்லை. இதை பட்டினத்தார், சங்கரர் போன்ற மகான்களின் வாழ்க்கையிலும் காணலாம்.

எம்மைப் போன்ற பாமரர்களின் வாழ்க்கையிலும் காணலாம்.

அன்னையின் இழப்பை ஜீரணிக்க முடியாத இந்த நிலை யில், அவர் மகிழ்ச்சியுடனும், பக்தியுடனும் கண்டு தரிசித்த தென்னிந்திய திருத்தலங்கள் சிலவற்றைப் பற்றி வெளியிடுவதன் மூலம் அவருடன் களித்த அந்த இனிய நாள்களை நினைவில் மீட்டு உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் ஆறுதல் தேட முற்படுகின்றோம்.

இது ஒரு முழுமைபெற்ற விடயமல்ல. தென்னிந்தியாவில் உள்ள பல்லாயிரக்கணக்கான திருத்தலங்களில் முக்கியமான சில திருத்தலங்களையே எம்மால் தரிசிக்க முடிந்தது. அவற்றுட் சிலவற்றைப் பற்றியே இங்கு குறிப்பிட முடிந்துள்ளது.

எமது இந்தத் திருத்தல யாத்திரைகளில் பல இந்திய நண்பர்கள் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்துள்ளனர்.

அவர்களில் சிலரின் பெயர்கள் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ள போதிலும், பலரின் பெயர்களைக் குறிப்பிட இயலவில்லை. அவர்கள் அனைவருக்கும், இந்நூலின் நோக்கத்தை உணர்ந்து சிறந்ததொரு அணிந்துரை வழங்கியுள்ள யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா. வேதநாதன் அவர் கட்கும்,

குறுகிய காலத்தில் சிறந்தமுறையில் இந்நூலை அச் சிட்டுத்தந்த பாரதி பதிப்பக உரிமையாளர் இ. சங்கர் அவர்கட் கும், பதிப்பக ஊழியர்களுக்கும், எனது சார்பிலும், எனது சகோதர, சகோதரிகளான சே. சிவசுப்பிரமணியசர்மா, சே. சிவ பாலசர்மா, சே.சிவசுந்தரம், (திருமதி) ஜெயலக்ஷ்மி சிதம்ப ரேஸ்வரசர்மா, (திருமதி) ஜெகதீஸ்வரி நாகேந்திரசர்மா சார் பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

199/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

*சே. சிவசண்முகராஜா*



திருச்சி உச்சிமலைப் பிள்ளையார் தரிசனம் வேண்டி
அம்மா செல்லும் அற்புதக்காட்சி

பாரதி பதிப்பகம் 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.